விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஞூ பங்குனி மீ 15-ம் உ | புதன்கிழமை | (28 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 30 | ஓசை 38

1983 ஆம் ஆண்டில்

## 4200 ரூபாய்க்கு நகை அடகுக்கு வட்டி ரூ. 4147; வரி ரூ. 207.40!

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியில் அடகு நகைகளை வைத்து மீளப்பெறுவதற்காக பணம் செலுத்தியவர்கள் தாம் அதிகமாக வட்டி. வரி உட்பட பணம் செலுத்தியதாக கூறுகின்றனர் இதனைப் பற்றி மக்கள் வங்கி மக்களுக்கு விளக்கம் தெரிவிக்காததே இக் குழப்பத்திற்குக் காரணம் இது குறித்து மக்கள் வங்கி உயர் அதிகாரியுடன் தொடர்பு கொண்ட போது அவர் சில விளக்கங்களைத் தந்தார்.

1983 ஆம் ஆண்டு மே மாதம் நகை ஈடுவைத்து நாலாயிரத்து இருநூறு ரூபா பெற்றவருக்கு 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரைக்கும் நாலாயிரத்து நூற்றி நாற்பத்தேழு ரூபா வட்டி அறவிடப்பட்டுள்ளது. (6 ஆம் பக்கம் பார்க்க)

# 3 மாதத்துக்குள் வட - கிழக்கு மாகாணசபைத்தேர்தல்!

## திருமலை கோட்டை அகதிகள் பிரச்சினை தேர்தலின் பின் தீரும்!

(திருக்கோணமலை)

வடக்கு, கிழக்கு மாகாணசபைக்கான புதிய தேர்தல் மிக விரைவில் நடைபெறவிருக்கிறது. மூன்று மாதங்களுக்குள் மாகாணசபைத் தேர்தல் முடிவடைந்த பின்னரே திருமலை பிரடரிக் கோட்டைக்குள் இருக்கும் சிங்கள அகதிகள் பிரச்சினைக்கும் நிரந்தரமான தீர்வு காணப்படவிருக்கிறது. வடக்கு, கிழக்கு மாகாணசபைக்கான தேர்தலுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகவும் தெரியவருகிறது.

திருக்கோணமலை பிரடரிக் கோட்டைக்குள் இருக்கும் அகதிகள் பிரச்சினை சம்பந்தமாக அகதிகள் குழுவுக்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்குமிடையே நேற்று பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இப்பேச்சுவார்த்தைகளுக்கு வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் ஜெனரல் நளின் செனிவிரத்தினா தலைமை தாங்கி (6 ஆம் பக்கம் பார்க்க)

### ஆசிரியர் அடித்துக்கொலை

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணியில் இளம் ஆசிரியர் ஒருவர் மர்மமான முறையில் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கக் காணப்பட்டார்.

மருதங்கேணியைச் சேர்ந்த முத்தையா சண்முகலிங்கம் (வயது 31) என்னும் கலைப் பட்டதாரி ஆசிரியரே அடித்துக் கொலை செய்யப்பட்டவராவார்.

கொழும்பு கொட்டாஞ்சேனை தமிழ் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணி புரியும் இவர் வீட்டுக்கு வந்து (6ஆம் பக்கம் பார்க்க)

### பழக்கதோஷம் விடவில்லை!

(யாழ்ப்பாணம்)

நாட்டு நிலைமை வழமைக்குத் திரும்பியும் யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள சில முக்கிய அலுவலகங்களில் ஊழியர்கள் கடமைக்கு வருவதில் தாமதம் காட்டுவதாக புகார்கள் தெரிவிக்கின்றனர்

மக்களுடன் நெருக்கமாகவுள்ள சில அலுவலகங்களில் உள்ள சில ஊழியர்கள் நேரத்துடன் அலுவலகங்களில் இருந்து போய்விடுவதாகவும் தெரிகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

### தமிழர் ஆசிரியர்சங்கம் புனரமைப்பு

(வடமராட்சி கிழக்கு)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நாடு பூராகவும் உள்ள தனது கிளைகளைப் புனரமைப்புச் செய்து வருகின்றது.

மலையகத்திலும், கொழும்பிலும் கிளைகளின் புனரமைப்பு வேலைகள் ஏற்கனவே முடிவுற்றுள்ளன.

(6ஆம் பக்கம் பார்க்க)

### உண்ணா விரதம்

(மூதூர்)

மூதூர் அரச தமிழ்க்கலவன் பாடசாலையில் அன்னை பூபதியின் நினைவாக ஒருநாள் அடையாள உண்ணா விரதம் மேற்கொள்ளப்பட்டது.

### தமிழில் ரஞ்சன் கையொப்பம்

24ஆம் திகதி காலை 9-50 மணியளவில் திருக்கோணமலையிலிருந்து இந்திய அமைதி காக்கும் படை வெளியேறியதைத் தெரிவிக்கும் செய்தி அடங்கிய உத்தியோகபூர்வமான கடிதத்தை வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கு நேற்று அனுப்பியுள்ளார். இக் கடிதத்தின் பிரதி யொன்றில் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணா தமிழ் மொழியில் கையெழுத்து வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### பத்திரிகையாளர் யாழ். வருகை

தற்பொழுது இந்திய அமைதி காக்கும் படையினரது வெளியேற்றத்தைத் தொடர்ந்து பத்திரிகையாளர்கள் பலர் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்து வருகிறார்கள்.

யாழ்ப்பாணத்திற்கு வெளிநாட்டு, உள்நாட்டுப் பத்திரிகையாளர்கள் பலர் விஜயம் செய்துள்ளார்கள். இப் பத்திரிகையாளர்களில் சிலர் நேற்று ஈழநாதம் பத்திரிகைக் காரியாலயத்திற்கு சமுகம் தந்திருந்தனர்.

இந்தியப் பத்திரிகையாளர்களிடம் ஏன் நீங்கள் முன்னர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவில்லை? எனக் கேட்டபொழுது, இந்திய அமைதிப் படை இங்கு நிலைகொண்டி (6 ஆம் பக்கம் பார்க்க)

### நூலக திறப்பு விழா

### தூபி திறப்பும் பொதுக் கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

வீரமரணமடைந்த தசன், கார்த்திக், சுமன், சுரீஸ், சின்னதீபன், கப்டன் தினேஷ், ராதா இவர்களின் நினைவாக இன்று ஓட்டுசுட்டானில் நினைவுத் தூபி ஒன்று திறக்கப்படவுள்ளது. இந் நிகழ்ச்சி மாலை 3.00 மணி அளவில் நடைபெறும். இந் நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தயா) அதன் செயலாளர் யோகரட்ணம் யோகி வன்னி மாவட்ட அரசியற் பொறுப்பாளர் சந்திரன் மேலும் கைலாஷ் சிற்றூர் அவைத் தலைவர்கள் கலந்து கொள்வார்கள்.

### மட்டக்களப்புக்கு மன்சூர் விஜயம்

(மட்டக்களப்பு)

வர்த்தக கப்பற்றுறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்திருந்தார்.

மட்டக்களப்பு பெரிய பள்ளிவாசலில் வைத்து ஏறாவூர், வாழைச்சேனை, ஓட்டமாவடி பள்ளிவாசல்களின நம்பிக்கை பொறுப்பாளர்களிடம் பேரீச்சம் பழப்பெட்டிகளை கையளித்தார்.

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபைக்குள் உள்ள உணவு தயாரிக்கும், உணவை கையாளும் கடை சொந்தக்காரர்கள் மற்றும் ஊழியர்களுக்கு இம்மாதம் 29 ஆம் திகதி யாழ் ஜுப்பிளி மருத்துவ மனையில் ஓர் சுகாதார கருத்தரங்கு நடைபெற

## இந்திய இராணுவம் தங்கியிருக்க தந்திரோபாயங்கள் கையாளப்பட்டன

-பிரேமதாஸா

(பண்டாரகம)

இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்திய இராணு... பருக்கிடையில் இந்திய இராணுவத்தை மீள அழைப்பதாக ராஜீவ் காந்தி தீர்மான

வடிகால் சுத்திகரிப்பு

தெரிவிக்கின்றனர்

மக்களுடன் நெருக்கமாகவுள்ள சில அலுவலகங்களில் உள்ள சில ஊழியர்கள் நேரத்துடன் அலுவலகங்களில் இருந்து போய்விடுவதாகவும் தெரிகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் ஆசிரியர்சங்கம் புனரமைப்பு

(வடமராட்சி கிழக்கு)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நாடு பூராகவும் உள்ள தனது கிளைகளைப் புனரமைப்புச் செய்து வருகின்றது.

மலையகத்திலும், கொழும்பிலும் கிளைகளின் புனரமைப்பு வேலைகள் ஏற்கனவே முடிவுற்றுள்ளன.

(6ஆம் பக்கம் பார்க்க)

## வடிகால் சுத்திகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வண்ணான்குளத்திலிருந்து நவீனசந்தை வழியாக புல்லுக்குளத்தை அடையும் வடிகால் விரைவில் சுத்திகரிக்கப்பட்டு நீரோட்டத்தை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் யாவும் செய்யப்படும்.

இக்கால்வாய் கடந்த பல காலமாக திருத்தி அமைக்கப்படாதிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இக்கால்வாயை திருத்தி அமைக்க யாழ் மாநகரசபை சுகாதார அதிகாரிகள் கூடி திட்டம் வகுத்திருப்பதாக மாநகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (லோ)

## கல்முனைக்குடியில் மக்கள் முன்னணிக் கிளை

(அம்பாறை)

கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த கல்முனைக்குடி முஸ்லிம் கிராமத்தில் கடந்தவாரம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட புலிகள் இயக்க மக்கள் முன்னணிக் கிளையின் நிருவாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஜனாப். எம்.பி. முகையதீன், செயலாளர்:

(6ஆம் பக்கம் பார்க்க)

தேர்தல் முடிவடைந்த பின்னரே திருமலை பிரடரிக் கோட்டைக்குள் இருக்கும் சிங்கள அகதிகள் பிரச்சினைக்கும் நிரந்தரமான தீர்வு காணப்படவிருக்கிறது. வடக்கு, கிழக்கு மாகாணசபைக்கான தேர்தலுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகவும் தெரியவருகிறது.

திருக்கோணமலை பிரடரிக் கோட்டைக்குள் இருக்கும் அகதிகள் பிரச்சினை சம்பந்தமாக அகதிகள் குழுவுக்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்குமிடையே நேற்று பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இப்பேச்சுவார்த்தைகளுக்கு வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் ஜெனரல் நளின் செனிவிரத்தினா தலைமை தாங்கி

(6ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய இராணுவம் தங்கியிருக்க தந்திரோபாயங்கள் கையாளப்பட்டன

-பிரேமதாஸா

(பண்டாரகம)

இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவத்தை ஒரு ஆக்கிரமிப்புப் படையெனப் பிரகடனப்படுத்தத் தான் தயாராக இருந்த சமயம், 1989 டிசம்பருக்கிடையில் இந்திய இராணுவத்தை மீள அழைப்பதாக ராஜீவ் காந்தி தீர்மானமாகக் கூறிய உறுதிமொழியை அடுத்துத் தான் அப்பிரகடனத்தை வெளியிடவில்லை என்றும், அப்பிரகடனம்



தயாபா நுலையால இருநத தாக பண்டாரகம மகாவித்தியாலயத்தில் நிகழ்ந்த மகாபொல ஒன்பதாவது ஆண்டு விழாவில் உரையாற்றும் போது ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா தெரிவித்தார்.

இந்திய அரசாங்கம், இலங்கையில் இந்திய இராணுவம் நிலைத்திருக்கும் காலத்தை நீடிப்பதற்கு பல தந்திரோபாயங்களைக் கையாண்டது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர் யாழ். வருகை

தற்பொழுது இந்திய அமைதி காக்கும் படையினரது வெளியேற்றத்தைத் தொடர்ந்து பத்திரிகையாளர்கள் பலர் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்து வருகிறார்கள்.

யாழ்ப்பாணத்திற்கு வெளிநாட்டு, உள்நாட்டுப் பத்திரிகையாளர்கள் பலர் விஜயம் செய்துள்ளார்கள். இப் பத்திரிகையாளர்களில் சிலர் நேற்று ஈழநாதம் பத்திரிகைக் காரியாலயத்திற்கு சமுகம் தந்திருந்தனர்.

இந்தியப் பத்திரிகையாளர்களிடம் ஏன் நீங்கள் முன்னர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவில்லை? எனக் கேட்டபொழுது, இந்திய அமைதிப் படை இங்கு நிலைகொண்டி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நூலக திறப்பு விழா

(திருக்கோணமலை)

மூதூர் கட்டைபறிச்சான் பொதுநூலகத்தின் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. புனரமைக்கப்பட்ட இந்த நூலகத்தை கட்டைபறிச்சான் கிராமோதய சபைத் தலைவர் திரு. க. குணபூசணம் திறந்துவைத்தார்

வர்த்தக கப்பற்றுறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்திருந்தார்.

மட்டக்களப்பு பெரிய பள்ளிவாசலில் வைத்து ஏறாவூர், வாழைச்சேனை, ஓட்டமாவடி பள்ளிவாசல்களின நம்பிக்கை பொறுப்பாளர்களிடம் பேரீச்சம் பழப்பெட்டிகளை கையளித்தார்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபைக்குள் உள்ள உணவு தயாரிக்கும், உணவை கையாளும் கடை சொந்தக்காரர்கள் மற்றும் ஊழியர்களுக்கு இம்மாதம் 29 ஆம் திகதி யாழ் ஜுப்பிளி மருத்துவ மனையில் ஓர் சுகாதார கருத்தரங்கு நடைபெற உள்ளது.

இக்கருத்தரங்கு மாநகர சபை சுகாதார உத்தியோகத்தர்களால் நடத்தப்பட உள்ளது. (லோ)

## நேர்மையாகவும் நியாயமாகவும் உறுப்பினர்கள் நடக்க வேண்டும்

- பிரேமதாசா

(கொழும்பு)

அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்காலத்தில் உற்பத்தியைப் பெருக்கி அமைதியைப் பேணுவதுடன் நேர்மையாகவும், நியாயமாகவும் நடந்து கொள்ள அணிதிரள வேண்டுமென ஜனாதிபதி அரச பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர் நாட்டு நிலைமை வழமைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதால் தொகுதி மக்களுடன் அதிக நேரத்தைச் செலவிட வேண்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி மாவட்டத்திற்கு மீன்பிடி விரிவாக்க அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு விரைவில் புதிதாக மீன்பிடித் திணைக்களத்தின் மீன்பிடி விரிவாக்கப் பணியகம் அமைக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி தனி மாவட்டமாக பிரிந்துள்ள போதிலும் கடந்த காலங்களில் இப்பகுதி மீனவக்கிராமங்களான பூநகரி, இரணை தீவு, வலைப்பாடு,

(6ஆம் பக்கம் பார்க்க)

## படை விலகல் அமெ. வரவேற்பு

(லண்டன்)

இலங்கையிலிருந்து இந்தியப் படைகள் வெளியேறியதை அமெரிக்க அரசு வரவேற்றுள்ளதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சு பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பால் கூட்டுறவுச் சங்கங்கள் யாழ். நகரில் மூடப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் உள்ள கூட்டுறவு பால் விற்பனை நிலையங்கள் மூடப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த பால் விற்பனை நிலையங்களுக்கு போதியளவு பால் கிடைப்பதில்லை எனவும், பால் உற்பத்தியாளர் பாலை தனியாரிடம் விற்பதினாலுமே இவற்றை மூடுவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக இவற்றுக்கு போதிய பால் கிடைக்காததால் வாடிக்கையாளர் ஏமாற்றத்துடன் செல்வதாகவும் விற்பனையாளர் தெரிவிக்கின்றனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியஇராணுவம்புதைத்துவைத்த பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

(திருக்கோணமலை)

சனியன்று இலங்கையை விட்டு வெளியேறிய இந்திய இராணுவம் பாவிக்கமுடியாத பழைய ஆயுதங்களைப் புதைத்து விட்டுச் சென்றுள்ளதாக கிடைத்த இரகசிய தகவலொன்றைத் தொடர்ந்து இலங்கைப்பாதுகாப்புப்படையினர் அவ் ஆயுதங்களைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தேடுதல் நடவடிக்கையின் போது திருக்கோணமலைப் பகுதியில் நிலத்துக்கடியில் புதைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள்கண்டுபிடிக்கப்பட்டுள்ளன பாதுகாப்புக் காரணமாக ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்ட இடத்தை வெளியிட இராணுவ வட்டாரங்கள் மறுத்து விட்டன. வெடிமருந்துகளைத் தவிரக் கண்டெடுக்கப்பட்ட ஆயுதங்கள் பலதிருத்துவிக்கக் கூடியனவையாம் இதே வேளை இந்திய இராணுவம் கடைசியாக முகாமிட்டிருந்த சீனன் குடாப்பகுதியில் மக்கள் நடமாடத் தொடங்கியிருப்பதோடு வாழ்க்கை வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது. இந்திய இராணுவம் கைவிட்டுச் சென்றதாகக் கருதப் படும் மின் கம்பிகளும், தந்திக் கம்பிகளும் சீனன் குடாப் பகுதியில் காணப்படுகின்றன.

## கமக்காரர்கள் கட்டுப் பணத்தைச் செலுத்துக!

(யாழ்ப்பாணம்)

வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் சமக்காரர் ஓய்வூதிய திட்டத்தில் கட்டுப்பணம் செலுத்தும் கமக்காரர் அனைவரும் தங்களுக்கு அண்மையிலுள்ள கூட்டுறவுக் கிராமிய வங்கியில் கட்டுப்பணங்களைச் செலுத்தும்படி கமத்தொழில் காப்புறுதிச்சபை மாவட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (லோ)

# ஆரம்பபாடசாலை பாடவிதானத்தில் பெரும் மாற்றம்

## கல்வி நிலைய பணிப்பாளர் விளக்கம்

(கொழும்பு)

ஆரம்ப பாடசாலை பாடவிதானத்தில் அடுத்த வருடம் முதல் முக்கிய மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாக தேசிய கல்வி நிலைய பணிப்பாளர் டாக்டர் திருமதி காரியவாசம் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அபிலாஷைகள் தேவைகள் என்பனவற்றை பூர்த்தி செய்யும் வகையில் முற்றிலும் மாறுபட்ட இலங்கைக்கு பொருத்தமான பாடவிதானமாக இது அமைந்திருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாடவிதானத்தின் புதிய மாற்றங்கள் குறித்து அவர் பத்திரிகையாளருக்கு விளக்கிக் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை அடிப்படையாக வைத்தே கல்வி சம்பந்தமான பலபுதிய தேசியக் கொள்கை ஒன்று வகுக்கப்படும்.

இளைஞர்கள் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபார்சுகளை அரசாங்கத்தால்

(6ஆம் பக்கம் பார்க்க)

# வட-கிழக்கு மாகாண சபையை அரசாங்கமே நிர்வகிக்கும்

## கடற்றொழில் விவசாய விருத்திக்கு 50 இலட்சம்

## அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா விளக்கம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாண சபையினை அரசாங்கமே நிர்வகிக்கும் என பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னா வெளிநாட்டு செய்தியாளரிடம் கூறினார்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் கடற்றொழில், விவசாயம் என்பவற்றை முன்னேற்றவும் சேதமான தொழிற்சாலைகளை திருத்தி அவற்றின் உற்பத்தி நடவடிக்கைகளை வழமைக்கு கொண்டுவர முடியும் என்றும் இதற்காக 50 லட்சம் டாலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

கருவாட்டுக்கு உகந்த அரைத்த உப்பு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் M. G. M No. 777, K. K. S. Road, JAFFNA.

யப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட M. D. 50 C. D. 50 சாளி சுசிக்கி 125 யமகா Mate 50 ஆகிய மோட்டார் சயிக்கில்களும் எம்மிடம் விற்பனைக்குண்டு.
OUR LADY STORES
601, Hospital Road, Jaffna. B/407

வரலாறு ஆண்டு 6 ஆண்டு 7 1990 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப் படுத்தப் படுகின்றது பாடத்திட்டத்தை தழுவி எழுதப்பட்டது ஆக்கம் ஆலோசனை எம் எஸ் அப்துல் ரஹீம் தி. கமலநாதன். B 362

### அச்சுக்கோர்ப்பாளர்தேவை

கீழ்க்கண்ட அச்சகத்திற்கு அனுபவம் வாய்ந்த அச்சுக் கோர்ப்பாளர்கள் தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவராயின் விரும்பத்தக்கது. 05-04-90 க்கு முன்பாக விண்ணப்பிக்கவும்.
''செந்தில்ஸ்'' 225, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் B/417

### தேவை

புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் உணவு பதனிடும் நிறுவனத்திற்கு ரொசாயனப் பகுப்பாளர் (Chemist) ஒருவர் தேவைப்படுகின்றார் தகுதியானோர் 5ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 004
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி C/o ஈழநாதம்
31, வைமன் வீதி,
யாழ்ப்பாணம். 429

### சேவை

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும் உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரதங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள் செற் கட்டிகள் தாச்சிச் சட்டிகள்


கஷ்டப்பாடசாலை ஆசிரிய பற்றாக்குறை நீங்க

# கிராமசேவை அலுவலர்பிரிவு ரீதியாக ஆசிரியர் நியமனம் வழங்கப்படவேண்டும்

## - கருத்தரங்கில் தகவல்

(வடமராட்சி கிழக்கு)

''வன்னித் தேர்தல் மாவட்டம் கூடிய கஷ்டப்பாடசாலைகளைக் கொண்ட பிரதேசமாகும். இங்கே ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பெரிய பிரச்சினைகள் உள்ளன.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின்நிதிச்செயலா திரு. என். சோதிநாதன் கிளிநொச்சியில் நடைபெற்ற இரண்டு நாள். ''கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளின் கல்விப்பிரச்சினைகள்'' என்னும் விடையம் சம்பந்தமான கருத்தரங்கின் இறுதிநாள் நிகழ்ச்சியில் தலைமை வகித்து உரையாற்றும்போது இவ்வாறு கூறினார்.

சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்க சம்மேளனம், பிரெடரிக் ஈ-பேர்ட் மன்றம், இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து இவ் இரண்டு நாள் கருத்தரங்கினை ஒழுங்கு செய்திருந்தது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 79 பாடசாலைகளில் 20 பாடசாலைகள் மிகக் கஷ்டப் பாடசாலைகளாகவும், 19 பாடசாலைகள் கஷ்டப் ாளடசாலைகளாகவும் உள்பன. எனவேதான், இக்கருத்தரங்கினை கிளிநொச்சியில் நடாத்த ஒழுங்கு செய்தோம். கஷ்டப்பாடசாலைகளின் ஆசிரிய பற்றாக்குறையினை நீக்கும் முகமாக, கிராம சேவை அலுவலர் பிரிவு ரீதியாக, ஆசிரியர்கள நியமிக்கப்பட வேண்டும் என முதன்முதலில் குரல் கொடுத்தது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்தான் என்று கூறினார்

மாடசாலை முகாமைத்துவ ஆலோயகர் திரு. ரி. றாகுல ராஜா இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க நிர்வாகச்செயலாளர் திரு. த. அருகிரிராஜா இலங்கைத் தமிழர் ஆசிரிய பொதுச் சங்க செயலாளர் திரு. த. மகாசிவம், கல்வி அதிகாரி திரு. எஸ். தர்மரத்தினம் ஆகியோரும் கருத்துரை வழங்கினார்கள்.

கருத்தரங்கில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. திரு. கனக மகேந்திரா நன்றி தெரிவித்து உரையாற்றினார். கருத்தரங்கின் இறுதியில் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தொத்தணிகள் பாடசாலைத் தெரிவுகள் ஆகியன மறுசீரமைக்கப்பட வேண்டும்.

இக்கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்களாவன, கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு போக்குவரத்து, தங்குமிட வசதிகள் செய்துகொடுக்கப்படல் வேண்டும்.

ஆசிரியர்களது சகலகொடுப்பனவுகளும் கல்வித்திணைக்களத்தினால் துரிதமாக்கப்பட வேண்டும்.

கஷ்டப் பிரதேசத்தில் தொடர்ந்து கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு விமோசனம் அளிக்கும் விதத்தில் இடமாற்றத்திட்டம் அமுல் செய்யப்படவேண்டும் என்பனவே. (36)

# விசர் நாய்கடிக்கு இலக்காகி நாட்டில் பலர் இறக்கின்றனர்

(கொழும்பு)

விசர் நாய்க் கடியால் இறப்போர் தொகை அதிகரிக்கிறது. நாட்டில் கடந்த வருடம் 125பேர் வரை விசர் நாய்க்கடிக்கு இலக்காகி உயிரிழந்ததாக சுகாதார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் கூறினார்.

இந்தத் தொகை ஏனைய வருடங்களைவிடக் கூடியது எனக்குறிப்பிட்ட அவர் விசர் நாய்க்கடி நோயைத் தடுக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகிறது என்றும் கூறுனார்.

மாகாணசபைகளின் சுகாதாரப்பணீப்பாளர் அமைச்சர், டாக்டர்கள், செயலாளர்கள் இதற்கு ஒன்றிணைந்துசெயற்பட வேண்டும் எனவும் அவர் சொன்னார்.

விசர் நாய்களை கிராமமட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றும், கட்டாக்காலி நாய்களை ஒழிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு விசர் நாயால் ஐந்துக்கு மேற்பட்டோர் இறந்து விடுவதாகவும் அதன்பின்னரே அந்த நாயும் இறப்பதாக அமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை

(கொழும்புத்துறை)

முல்லைத்தீவு தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் போத்தலில் கள்ளடைக்கும் தொழிற்சாலை ஒன்றை முல்லைத்தீவு தாளவாய்க்கால் என்னுமிடத்தில் இம்மாதம் 28 ஆம் திகதி காலை 9 மணிக்குத் திறந்து வைக்கவுள்ளது.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் இத் தொழிலகத்தைத் திறந்து வைப்பார். (24)

## பிரான்சில் விபத்தில் மரணம்

(சுழிபுரம்)

கார் விபத்தில் சிக்கி சுழிபுர மேற்கைச் சேர்ந்த 17வயது இளைஞர் ஒருவர் பிரன்சில் மரணமானார். விஸ்வநாதன் சசிகுமார் என்பவே இவ்வாறு பரிதாபமான முறையில் மரணத்தை தழுவிக் கொண்டார். இவ் இளைஞர் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பே வெளிநாடு சென்றவர் என்று தெரிய வருகிறது. (17

## கண்காட்சியும் ஏல விற்பனையும்

(சுழிபுரம்)

சுழிபுரம் பறாளாய் மாதர் சங்கத்தில் கடந்த ஒன்பது மாத காலமாகயாழ். தொழிற் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடந்த வந்த தையற்பயிற்சி நிலையத்தில் பயிற்சியை முடித்த இருபத்தி மூன்று யுவதிகளும் மேற்படி திணைக்களத்தால் நடாத்தப்பட்ட இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். இந்த யுவதிகளின் சுய தொழில் ஆக்கத்தையும் சுய தேவை பூர்த்தியையும் பெறும் வகையில் இவர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சியில் திறமை பெற்றுள்ளதாகவும் இவர்களினால் உருவாக்கப்பட்ட ஏராளமான கைத்திறன் உற்பத்திப் பொருட்களும், தையல் உடைகளும் அலங்காரப் பொருட்களும் இம்மாதம் 30,. 31 ஆம் திகதிகளில் மேற்படி மாதர் சங்கத் தையற் பயிற்சி நிலைய மண்டபத்தில் கண்காட்சிக்கும் ஏல விற்பனைக்கும் வைக்கப்படவுள்ளதாக மாதர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (17)


வின்சர் - யாழ்
10·30 2.30 6.30
BOBBY
(உருது)
இனிய பாடல்களுடன் கூடிய காதல் காவியம்

81 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
மனிதன்
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
நாயகன்
(கலர்)

லிடோ (யாழ்)
75வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
பூ- பூவா பூத்திருக்கு
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
ராஜாதி ராஜா
(கலர்)

128வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)


# மாணவர்களால் மோட்டார்சைக்கிள் கார்மோதல்

(சுழிபுரம்)

வீதியை ஆட்சி செய்து கொண்டு, மூன்று சைக்கிள்களில் சென்ற பாடசாலை மாணவர்களினால், மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் கார் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் ஒன்று நேற்றுக் காலை கட்டுடையில் இடம்பெற்றது. மாணவர்களின் இதுபோன்ற ஏதேச்சாதிகாரமான சைக்கிள் சவாரிகளினால், வாகன ஓட்டுனர்களும், பாதசாரிகளும் பாதிப்படையும் நிலை குறித்து மாணவர்கள் கவனத்திற் கொள்ள வேண்டுமென பலரும் அபிப்பிராயப்படுகிறார்கள். (17)

## முதலுதவி நூல்

(தீவுப்பகுதி)

சர்வதேச சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் இலங்கை, யாழ்ப்பாணம், தீவுப்பகுதி பிரிவினரால் 'முதலுதவிக் கைநூல்' ஒன்று அண்மையில் வெயிட்டுற் வைக்கப்பட்டது.

இந்நூலில் முதலுதவி பளிறிய விபரங்கள் அடங்கியுள்ளது. மேற்படி படையின் புங்குடுதீவுப் பொறுப்பாளர் திரு. கா.நாகேந்திரன் வெளியீட்டுக் குழு சார்பாக இந் நூலை வெளியிட்டுள்ளார். (15)

## சமாதானக்குழு

பெரிய கல்லாறு சமாதானக்குழு, தைமாத நடுபகுதியில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் பெரியகல்லாறு பொறுப்பாளர் கீனு முன்னிலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக்குழு பற்றி ஆரம்பத்தில் மக்களுக்கு அவ்வளவு அக்கறை ஏற்படவில்லை. ஆனால் தற்போது இக்குழு திறமையாக இயங்கி வருவதால் குழுவிக்கு முழுமையான ஒத்துழைப்புக் கிடைத்து வருவதாக அதன் தலைவர் திரு. சி. வில்லியம் கூறினார்.

இக் குழு குறுகிய காலத்தில் 60க்கு மேற்பட்ட முறைப்பாடுகளை விசாரித்து தீர்வு கண்டது, அனேகமாக கொடுக்கல் வாங்கல் பிரச்சனைகளே இருந்தன. அத்துடன் காணி சம்பந்தமான முறைப்பாடுகள் கணிசமான அளவு இருந்தன. (45,

## டேபிள் டெனிஸ் பயிற்சி வகுப்பு

(யாழ்ங்பாணம்)

யாழ். வை. எம். சி. ஏ. யினால வருடாவருடம் நடாத்தப்படும் டேபிள் டெனிஸ் பயிற்சி வகுப்புகள் இவ்வருடமும் ஏப்பிரல் 2ஆம் திகதியில் இருந்து 12ஆம் திகதி வரை வை. எம். சி. ஏ. உள்ளக விளையாட்டரங்கில் தகுதி வாய்ந்த பயிற்சியாளர்களால் நடாத்தப்படும். பிரதம பயிற்சியாளராக வி.சிவபாதசுந்தரம் கடமையாற்றுவார்.

## தவறிவிட்டது

யாழ். பஸ் நிலையத்தில் இருந்து கஸ்தூரியார் வீதியில் அப்பையா கடைச் சந்திக்கும் இடையில், நிறுவனப்பணமான ரூபா 16500/- ஊழியராகிய என்னால் தவறவிடப் பட்டுவிட்டது. தயவுசெய்து இதனைக் கண்டெடுத்தவர்கள் மனிதாபிமானத்தின் பேராலும், வேலையின் நிமித்


புதுவருட வாழ்த்துக்கள்
அனைவருக்கும் உரித்தாகுக!

மக்கள் வங்கி

## தேவை

புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் உணவு பதனிடும் நிறுவனத்திற்கு இரசாயனப் பகுப்பாளர் (Chemist) ஒருவர் தேவைப்படுகின்றார் தகுதியானோர் 5ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 004

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி C/o ஈழநாதம்
31, வைமன் வீதி,
யாழ்ப்பாணம். 429

## சேவை

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும் உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரதங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள் செற் கட்டிகள் தாச்சிச் சட்டிகள் றேகள் சோஸ்பான்கள்பொரியல் சட்டிகள் டின்னர் செற்கள் ரீ செற்கள் கோவிற்சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம்.

RAJZ BRAND பார்வை அறை S A தேவதாசன் சூறாவத்தை சுன்னாகம்.

(B 414)

குள்ளான சம்பவம் ஒன்று நேற்றுக் காலை கட்டுடையில் இடம்பெற்றது. மாணவர்களின் இதுபோன்ற ஏதேச்சாதிகாரமான சைக்கிள் சவாரிகளினால், வாகன ஓட்டுனர்களும், பாதசாரிகளும் பாதிப்படையும் நிலை குறித்து மாணவர்கள் கவனத்

## தவறிவிட்டது

யாழ். பஸ் நிலையத்தில் இருந்து கஸ்தூரியார் வீதியில் அப்பையா கடைச் சந்திக்கும் இடையில், நிறுவனப்பணமான ரூபா 16500/- ஊழியராகிய என்னால் தவறவிடப்பட்டுவிட்டது. தயவுசெய்து இதனைக் கண்டெடுத்தவர்கள் மனிதாபிமானத்தின் பேராலும், வேலையின் நிமித்தமும் என்னிடம் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

பொ. இரவீந்திரன்
மே/பா. ஆ. வேலுப்பிள்ளை
50, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.

சர்வதேச சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் இலங்கை, யாழ்ப்பாண், தீவுப் பகுதி பிரிவினரால் 'முதலுதவிக் கைநூல்' ஒன்று அண்மையில் வெயிட்டுற் வைக்கப்பட்டது.

இந்நூலில் முதலுதவி பளிறிய விபரங்கள் அடங்கியுள்ளது. மேற்படி படையின் புங்குடுதீவுப் பொறுப்பாளர் திரு. கா.நாகேந்திரன் வெளியீட்டுக் குழு சார்பாக இந் நூலை வெளியிட்டுள்ளார். (15)

திறமையாக இயங்கி வருவதால் குழுவிக்கு முழுமையான ஒத்துழைப்புக் கிடைத்து வருவதாக அதன் தலைவர் திரு. சி. வில்லியம் கூறினார்.

இக் குழு குறுகிய காலத்தில் 60க்கு மேற்பட்ட முறைப்பாடுகளை விசாரித்து தீர்வு கண்டது, அனேகமாக கொடுக்கல் வாங்கல் பிரச்சனைகளே இருந்தன. அத்துடன் காணி சம்பந்தமான முறைப்பாடுகள் கணிசமான அளவு இருந்தன. (45)

## டேபிள் டெனிஸ் பயிற்சி வகுப்பு

(யாழ்ங்பாணம்)

யாழ். வை. எம். சி. ஏ. யினால வருடாவருடம் நடாத்தப்படும் டேபிள் டெனிஸ் பயிற்சி வகுப்புகள் இவ்வருடமும் ஏப்பிரல் 2ஆம் திகதியில் இருந்து 12ஆம் திகதி வரை வை. எம். சி. ஏ. உள்ளக விளையாட்டரங்கில் தகுதி வாய்ந்த பயிற்சியாளர்களால் நடாத்தப்படும். பிரதம பயிற்சியாளராக வி.சிவபாதசுந்தரம் கடமையாற்றுவார்.

யுவதிகளின் சுய தொழில் ஆக்கத்தையும் சுய தேவை பூர்த்தியையும் பெறும் வகையில் இவர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சியில் திறமை பெற்றுள்ளதாகவும் இவர்களினால் உருவாக்கப்பட்ட ஏராளமான கைத்திறன் உற்பத்திப் பொருட்களும், தையல் உடைகளும் அலங்காரப் பொருட்களும் இம்மாதம் 30, 31 ஆம் திகதிகளில் மேற்படி மாதர் சங்கத் தையற் பயிற்சி நிலைய மண்டபத்தில் கண்காட்சிக்கும் ஏல விற்பனைக்கும் வைக்கப்படவுள்ளதாக மாதர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (17)

ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
ராஜாதி ராஜா
(கலர்)

128வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)

புதுவருட வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகுக!

ஆங்கில மருந்து வகைகளுக்கு
விஜயம் செய்யுங்கள்
சிங்கம்ஸ் பார்மஸி
25, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
(B/435)

புதுவருட வாழ்த்துக்கள்
அனைவருக்கும் உரித்தாகுக!

நங்கையர் விரும்பும் நவநாகரிகமான
புடைவைத் தினிசுகளுக்கும் கூறைச்சேலை
வகைகளுக்கும் கைத்தறிப் புடைவைகளுக்கும்
புகழ்பெற்ற ஸ்தாபனம்

சிங்கம்ஸ்
ரெக்ஸ்ரைல்ஸ்
172 (84), கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம். B/438

## மக்கள் வங்கி

# அடகு நகைகள் மீளளித்தல்

### யாழ்ப்பாண மாவட்டம்

பின்வரும் கிளைகளில் அடகு வைத்து, மீளப் பெறுவதற்காகப் பணம் செலுத்தியவர்களது நகைகள் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு அருகில் இருக்கின்ற பொலிஸ் தொடர் மாடிக் கட்டிடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து கீழ்க்கண்டவாறு விநியோகிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1. ஊர்காவற்றுறைக் கிளை | (22-09-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு | 29-3-90 | வியாழன் |
| 2. பருத்தித்துறை கிளை | (15-09-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 29-3-90 | வியாழன் |
| 3. வல்வெட்டித்துறைக் கிளை | (13-10-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 29-03-90<br>30-03-90 | வியாழன்<br>வெள்ளி |
| 4. நெல்லியடிக் கிளை | (15-09-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 30-3-90<br>31-3-90 | வெள்ளி<br>சனி |
| 5. சுன்னாகம் கிளை | (9-10-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 30-3-90<br>31-3-90 | வெள்ளி<br>சனி |
| 6. காங்கேசன்துறைக் கிளை | 22-9-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 31-3-90 | சனி |

மேற்குறிப்பிட்ட தினங்களில் காலை 8. 30 மணி தொடக்கம் நண்பகல் 1. 00 மணி வரை அடகு நகைகள் மீளளிக்கப்படும்.

அடகு வைத்தவர்கள் தமது அடையாள அட்டை, பணம் கட்டியதற்கான வங்கி இரசீது ஆகியவற்றுடன் சமுகந்தந்து நகைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மற்றைய கிளைகளின் நகைகள் சித்திரை 3ஆம் திகதி முதல் மீளளிக்கப்படும். அது பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

பிராந்திய முகாமையாளர்
மக்கள் வங்கி. யாழ்ப்பாணம்.
(B/431)

புதுவருட வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகுக!

நாளுக்கோர் புதுமை
நாடுவது உண்மை
இவற்றை
அளிப்பதுதான்
சீமாட்டி

T. P. 24413

SEEMATI

122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். B/437

# எஸ்தோனியக் கம்யூனிஸ்ட் கட்சியும் மொஸ்கோ உறவைத்துண்டித்தது; அஸர். ஆர்மேனியர் மோதல்

(மொஸ்கோ)

லிதுவேனியாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி எஸ்தோனியா கம்யூனிஸ்ட் கட்சியும் மொஸ்கோவுடனான தனது சகல தொடர்புகளையும் துண்டித்துக் கொண்டுள்ளது. இதே வேளை ஆர்மேனியர்களுக்கும் அசர்பையானியர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின் போது 11 பேர் உயிரிழந்தனர்.

அசர்பையான் கஸாக் மாவட்டத்திலுள்ள மூன்று கிராமங்களின் மீது சென்ற சனியன்று ஆர்மேனியத் தீவிரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இச்சம்பவத்தின் போது ஐந்து பேரைக் கொண்ட குடும்பம் ஒன்று வீட்டுடன் எரித்து சாம்பராக்கியதோடு ஒன்பது பேர் கொல்லப்பட்டனர்.

வியாழனன்று அசர்பையானியர் மேற்கொண்ட ஆர்ட்டிலறித் தாக்குதலின் போது இரண்டு ஆர்மேனியர்கள் கொல்லப்பட்டனராம். அசர்பையான் புகையிரதமொன்றில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. காயப்பட்டோர் விபரம் தெரியவில்லை. இத்தகவல்களை டாஸ் செய்தித் தாபனம் வெளியிட்டுள்ளது.

லிதுவேனியாவுக்கு எதிரான கெடுபிடிகளை மொஸ்கோ முடுக்கி விட்ட சமயத்தில் தான் இந்த இரண்டு தென் சோவியத் குடியரசுகளில் கலகம் ஆரம்பித்தது.

லிதுவேனியா சுதந்திரப் பிரகடனம் செய்த பிறகு தீவிரவாதிகள் ஆயுதங்களைச் சேகரித்தும் இராணுவம் ஒன்றை நிறுவி வருவதாக சோவியத் ஜெனரல் வலன்ரின் வரண்கோ தெரிவித்துள்ளார். லிதுவேனியத் தலைவர்கள் அரசியல் கைதிகளைச் சிறைவைப்பதற்கு முகாம்களை அமைத்துவருவதாகவும் அவர் குற்றஞ் சாட்டினார். தீவிரவாதப் தலைவர்கள் குற்றச் சாட்டுக்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர். இத்தகவல் பொய்யானது என்றும், தமது இயக்கம் சாத்வீகமானது என்றும் கிளர்சிக்காரர்களின் அமைப்பான சவுடிஸ் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

எஸ்தோனியாவின் தலைநகரான தாஷனில் கம்யூனிச கட்சியின் விசேட மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி எஸ்தோனியா மொஸ்கோவுடனான தொடர்புகளைத் துண்டிப்பது என 63% வாக்குகளால் முடிவெடுக்கப்பட்டது இந்த முடிவைப் பிற்போடும்படி கம்யூனிச கட்சியின் மத்தியகுழு உறுப்பினரான அன்றி கிரனிக்கோ விடுத்த வேண்டுகோளையும் எஸ்தோனிய கம்யூனிசக் கட்சி நிராகரித்துள்ளது.

# காஷ்மீர் நிலைகுறித்து பாராளுமன்றத்தில் விவாதம்

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீரில்நடைபெறும் வன்முறைகுறித்துடில்லியில் பாராளுமன்றம் சிறப்பு விவாதத்தைத்தொடக்கியிருக்கிறது.

காஷ்மீரில் இருந்து இந்துக்கள் பெருமளவிற்கு வெளியேறுவதற்கும், அங்கு கலவரங்கள் மூளுவதற்கும்மாநில ஆளுநர் ஜக் மோகனும் அவரது நிர்வாகமுமே காரணம் என்று தேசிய மகாநாட்டுக் கட்சியினர் குற்றஞ் சாட்டியுள்ளனர். மேலும் இப்பிரச்சினை குறித்து உயர்மட்ட விசாரணை நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

இதே வேளை காஷ்மீரில் அரசியல் வாதிகள் சிலர் கொலையுண்டது குறித்து பிரதம மந்திரி வி.பி. சிங் அதிருப்தி தெரிவித்துள்ளார். அத்துடன் காஷ்மீரில் கடந்த கால தவறுகளை சீராக்குவதற்கு தமது அரசும், கட்சியும் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள ஆயத்தமாக இருக்கிறது எனவும் குறிப்பிட்டார்.

# லித்வேனிய - சோவியத் நெருக்கடி நீங்கி, உறவு வளர சமரச முயற்சி

## பேச்சுவார்த்தையில் உடன்பாடு

(மொஸ்கோ)

சோவியத் தலைமைப்பீடத்திற்கும், லித்வேனிய ஆட்சியாளர்களுக்கும் இடையே நலிந்து போன உறவுகளைக் குறித்து பேச்சுவார்த்தை ஒன்றை சோவியத் யூனிய இராணுவ அதிகாரிகளும்' லித்வேனிய அரச அதிகாரிகளும் நடத்தியுள்ளனர்,

இப் பேச்சுவார்த்தையின் முடிவில் கருத்து வெளியிட்ட லித்வேனியத் தலைவர் லித்வேனிய அரசு தரப்பும், சோவியத் இராணுவப் படைத்தரப்பும் பேச்சுவார்த்தைகளைத் துவக்கி இருப்பது நெருக்கடி நிலையில் திடீர் நியாயங்கள் ஏற்பட நல்ல அறிகுறியாக தென்படுகிறது என்று குறிப்பிட்டார்.

இப் பேச்சுவார்த்தையில் லித்வேனிய தரப்பில் துணைத் தலைவரும், சோவியத் அரசு தரப்பில் லித்வேனியாவில் இருக்கும் இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இப் பேச்சுவார்த்தையில் பின்வரும் உடன்பாடு ஏற்பட்டது. இருதரப்பும் ஒருவரை ஒருவர் கலந்து கொள்ளாமல் திடீர் நடவடிக்கைகளில் இறங்கக்கூடாது என்ற ஒப்புதல் ஏற்பட்டது.

அதேவேளை சோவியத் இராணுவத்தினரை, லித்வேனிய அரச ஆதரவாளர்கள் மரியாதைக் குறைவாக நடத்தக்கூடாது என்று இராணுவத் தரப்பில் எச்சரிக்கை வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதேபோல் சோவியத் யூனியனும் அனாவசியமான நெருக்கடிகளைத் தூண்டும் வரையில் இராணுவக் ஹெலிகொப்டர்களையும், கனரக இராணுவ வாகனங்களையும உலாவ விடக்கூடாது என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இப்பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து சுமுகமாக நடைபெறுமானால். இரு தரப்பினருக்கும் இடையில் நல்ல உறவுநிலை ஏற்படலாம் என அங்குள்ள அரசியல் தரப்பினர்கள் கருதுகிறார்கள்.

### காட்டுக்குள் கிடந்த சிசு

(வவுனியா)

வவுனியா புதிய சின்னக்குளம் காட்டுப்பகுதியில், மிருக வேட்டைக்குச் சென்றவர்களால் அநாதரவான நிலையில் உயிருடன் சிசு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

பொலிசின் விசாரணையின் பின் மேற்படி சிசு உரியவரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

இருபத்தியிரண்டு வயதுள்ள இளம்பெண் இச் சிசுவைப் பிரசவித்து, காட்டுக்குள் வீசியிருந்தது குறிப்பிடத்தக்கது. (தி)

### ஜனநாயகக் கட்சிகள் முன்னணியில்!

(புடாபெஸ்ற்)

ஹங்கேரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த சுயேச்சையான பொதுத்தேர்தலில் 80 வீத வாக்குகள் எண்ணப்பட்டுவிட்டன. இந்நிலையில் ஜனநாயக அரங்கும், ஜனநாயகக் கூட்டணியும் முன்னணியில் நின்கின்றன.

### சிக்கன கடன் சங்க வருடாந்த கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வருடாந்தப் பொதுக்கூட்டம் அடுத்த மாதம் 22ஆம் திகதி நடைவுள்ளது.

இப்பொதுக் கூட்டம் யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்

## மட்டக்களப்பில் ஆசிரியர், அதிபர்

# இலக்கியக் கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் நடைபெறும் இலக்கியம் தொடர்பான கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு பாடசாலை ஆசிரியர்கள், உயர் வகுப்பு மாணவர்களுக்குச் சுற்றறிக்கைமூலம் அறிவிப்பது விரும்பத்தக்கது.

மேற்கண்டவாறு மட்டக்களப்புக் கச்சேரி கலாசாரப் பிரிவு மாவட்டக் கல்விப் பணிப்பாளருக்குக் கடிதமூலம் அறிவித்துள்ளது.

தலைமையக உதவி அரச அதிபர் திரு. ஆர். நாகலிங்கம் இதுதொடர்பாக அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்

இக்கூட்டங்களுக்கு அழைப்பு அனுப்பி வைக்கப்பட்டாலும் கலந்துகொள்வதுமிகக்குறைவு என சுட்டிக் காட்டியுள்ளார்.

மேற்படி கடிதம் ஆசிரியர், கலாசாலை அதிபர், கிழக்குப் பல்கலைக் கழகப் பதிவாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### விளையாட்டுப் போட்டி

(முத்தையன்கட்டு)

முத்தையன்கட்டு இடது கரை அர்சினர் தமிழ் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி 28-3-90 புலன்கிழமை மேற்படி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகிறது.

### புதிய நூலகர்

(தீவுப்பகுதி)

வெலணைப் பிரதேச சபையினால் நடாத்தப்பட்டு வரும் பொதுசன நூல் நிலையத்திற்குப் புதிய நூலகராகத் திருமதி கருணாகரன் நியமிக்கப்பட்டுள்திரர்.

இவர் முன்பு திருகோணமலை மாவட்டத்தில் நூலகராகக் கடமைபாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (15)

# சித்திர, சிற்ப கலைஞர்களை ஊக்குவிக்க புதிய திட்டம்

## உள்ளூராட்சி ஆணையாளர் நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

ஓவிய சிற்பக்கலைஞர்களை ஊக்குவிக்க உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ் டிவகலால நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன்படி இவர்களின் படைப்புக்களை வாங்கி பாதுகாத்து அருஞ்சுவடிகளாக பேணவுள்ளார்.

முன்னாள் எழுத்தாளர்களின் ஆக்கங்களை வாங்கி உள்ளூராட்சி உப அலுவலகங்களின் நூல் நிலையங்களில் வைக்கவும் ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் ஆணையாளரின் இப் புதிய திட்டத்தால் பல கலைஞர்கள் பயன்பெறவுள்ளனர்.

இதே வேளை இங்குள்ள பாடசாலைகள் பலவற்றில் சித்திரபாடம் கற்பிக்க போதிய சித்திர ஆசிரியர்கள் இல்லை எனவும் தெரிவிக்கப் படுகிறது.

சித்திர பாடம் பயின்றால் பலர் எதிர்காலத்தில் இக்கலையில் தேர்ச்சி பெற்று ஆணையாளரின் நடவடிக்கைகளால் பயன் பெறுவார்கள்.

## பாரதிபுரம், கற்பகபுரம்

# கிராம மக்களுக்கு தனி வீடமைப்பு நடவடிக்கை

(வவுனியா)

புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ்,வவுனியாவில் உள்ளபாதிப்படைந்த கிராமங்களான பாரதிபுரம், கற்பகபுரம் ஆகிய இடங்களில் வாழும் குடும்பங்களுக்குகாணிகள் வழங்கப்பட்டு, வீடமைப்பு நடவ்டிக்கைகளும்மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வவுனியா தெற்குத் தமிழ்ப் பிரிவு உதவி அரசாங் அதிபர் நிர்வாகத்தின் கீழ் உள்ள இக் கிராமங்களில்மலையகத்தமிழ் மக்களே வாழ்ந்து வருகிறார்கள்.

பாரதிபுரத்தில் நூற்றிஒன்பது குடும்பங்களும் கற்பகபுரத்தில்தொண்ணூற்றியொரு குடும்பங்களும் இந்த புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் நன்மை பெற உள்ளன.

இது இவ்வாறிருக்க, அனுராதபுரத்திலிருந்து இடம் பெயர்ந்துஓமந்தை அகதிமுகாமில் தங்கியிருந்த பதினெட்டு குடும்பங்களை செட்டிகுளம் கந்தசாமி நகரில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன என்று வவுனியா உதவி அரசாங்க அதிபர் இமெல்டா அற்புதராஜா தெரிவித்தார். (தி)

இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் ஆடும் நாடாக இருந்தும் சர்வதேசக் கிரிக்கெட் ஆட்டங்

# சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களில்

கொழும்பு, காலி, கண்டி இன்றும் ஒரு சில நகரங்களில் மட்டுமே கிரிக்கெட் சிறப்பாக

## முன்னணியில்!

(புடாபெஸ்ற்)

ஹங்கேரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த சுயேச்சையான பொதுத்தேர்தலில் 80 வீத வாக்குகள் எண்ணப்பட்டுவிட்டன. இந்நிலையில் ஜனநாயக அரங்கும், ஜனநாயகக் கூட்டணியும் முன்னணியில் நின்கின்றன.

## சிக்கன கடன் சங்க வருடாந்த கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வருடாந்தப் பொதுக்கூட்டம் அடுத்த மாதம் 22ஆம் திகதி நடைவுள்ளது.

இப்பொதுக் கூட்டம் யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் சமாசத் தலைவர் திரு. ச. ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறும்.

இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் சகல சங்கங்களும் தமது பிரேரணைகளை அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பொதுக் கூட்டத்தில் ஆராய்வதற்கு கிராமிய ரீதியில் மக்களின் வாழ்க்கை நிலையை வெளிப்படுத்தும் 35 கேள்விகளைக் கொண்ட புள்ளிவிபரக்கொத்து சகல கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சமாசத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (24)

## மட்டக்களப்பில் கவியோகிக்கு அஞ்சலிக் கூட்டம்

(மட்டக்களப்பு)

கவியோகி சுத்தானந்தர் சமய துறவியாக வாழ்க்கை நடத்திய போதும் சமுதாய கொடுமைகளுக்கு எதிராக குரல் கொடுத்தும் கலை இலக்கிய பணிகளில் கணிசமான பங்களிப்பு செய்தவர்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட கலாசார பேரவையின் மாதாந்த கூட்டத்தில் உரையாற்றிய பேரவை உறுப்பினர் திரு. எம். சிவநேசராசா குறிப்பிட்டார்.

செயலக மண்டபத்தில் மட்டக்களப்பு மேலதிக அரச அதிபர் திரு. ஆர். தியாகலிங்கம் தலைமையிலான இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில்

''பாரத சக்தி மகாகாவியம்'' என்ற மகோன்னத காவியம் இயற்றி மக்கள் மத்தியில் கலங்கரை விளக்கமாக திகழ்ந்த அன்னாரின் இழப்பு தமிழினத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் என்றார்.

தலைமையக உதவி அரச அதிபர் திரு. ஆர். நாகலிங்கமும் பேசினார். (37)

## இலக்கியக் கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் நடைபெறும் இலக்கியம் தொடர்பான கூட்டங்களில் கலந்துகொள்ளுமாறு பாடசாலை ஆசிரியர்கள், உயர் வகுப்பு மாணவர்களுக்குச் சுற்றறிக்கைமூலம் அறிவிப்பது விரும்பத்தக்கது.

மேற்கண்டவாறு மட்டக்களப்புக் கச்சேரி கலாசாரப் பிரிவு மாவட்டக் கல்விப் பணிப்பாளருக்குக் கடிதமூலம் அறிவித்துள்ளது.

தலைமையக உதவி அரச அதிபர் திரு. ஆர். நாகலிங்கம் இதுதொடர்பாக அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்

இக்கூட்டங்களுக்கு அழைப்பு அனுப்பி வைக்கப்பட்டாலும் கலந்துகொள்வதுமிகக்குறைவு என சுட்டிக் காட்டியுள்ளார்.

மேற்படி கடிதம் ஆசிரியர், கலாசாலை அதிபர், கிழக்குப் பல்கலைக் கழகப் பதிவாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திடீர் நடவடிக்கைகளில் இறங்கக்கூடாது என்ற ஒப்புதல் ஏற்பட்டது.

அதேவேளை சோவியத் இராணுவத்தினரை, லித்வேனிய அரச ஆதரவாளர்கள் மரியாதைக் குறைவாக நடத்தக்கூடாது என்று இராணுவத் தரப்பில் எச்சரிக்கை வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதேபோல் சோவியத் யூனியனும் அனாவசியமான நெருக்கடிகளைத் தூண்டும் வகையில் இராணுவக் ஹெலிகொப்டர்களையும், கனரக இராணுவ வாகனங்களையும உலாவ விடக்கூடாது என்றும் கேட்டுக்

28-3-90 புலன்கிழமை மேற்படி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகிறது.

## புதிய நூலகர்

(தீவுப்பகுதி)

வெலணைப் பிரதேச சபையினால் நடாத்தப்பட்டு வரும் பொதுசன நூல் நிலையத்திற்குப் புதிய நூலகராகத் திருமதி கருணாகரன் நியமிக்கப்பட்டுள்திரார்.

இவர் முன்பு திருகோணமலை மாவட்டத்தில் நூலகராகக் கடமைபாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (15)

## தனி வீடமைப்பு நடவடிக்கை

(வவுனியா)

புனர் வாழ்வுத் திட்டத்தின் கீழ்,வவுனியாவில் உள்ளபாதிப்படைந்த கிராமங்களான பாரதிபுரம், கற்பகபுரம் ஆகிய இடங்களில் வாழும் குடும்பங்களுக்குகாணிகள் வழங்கப்பட்டு, வீடமைப்பு நடவடிக்கைகளும்மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வவுனியா தெற்குத் தமிழ்ப் பிரிவு உதவி அரசாங் அதிபர் நிர்வாகத்தின் கீழ் உள்ள இக் கிராமங்களில்மலையகத்தமிழ் மக்களே வாழ்ந்து வருகிறார்கள்.

பாரதிபுரத்தில் நூற்றிஒன்பது குடும்பங்களும் கற்பகபுரத்தில்தொண்ணூற்றியொரு குடும்பங்களும் இந்த புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் நன்மை பெற உள்ளன.

இது இவ்வாறிருக்க, அனுராதபுரத்திலிருந்து இடம் பெயர்ந்துஓமந்தை அகதிமுகாமில் தங்கியிருந்த பதினெட்டு குடும்பங்களை செட்டிகுளம் கந்தசாமி நகரில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று வவுனியா உதவி அரசாங்க அதிபர் இமெல்டா அற்புதராஜா தெரிவித்தார். (தி)

# சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களில் இலங்கையின் பங்களிப்பு!

இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் ஆடும் நாடாக இருந்தும் சர்வதேசக் கிரிக்கெட் ஆட்டங்களில் பங்குகொள்வது குறைவாகவே உள்ளது என்பது பொதுவான ஒரு குற்றச்சாட்டாகும். இதனை நீக்கும்வகையில் 3 மாத அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு அண்மையில் இலங்கையணி நாடு திரும்பியது. அவுஸ்திரேலியாவில் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும், பாகிஸ்தான் உள்ளிட்ட முத்தரப்பு ஒருநாள் சர்வதேச ஆட்டங்களிலும் இலங்கை கலந்துகொண்டது. டெஸ்ட் ஆடும் 7 நாடுகளிலும், மிக இளைய நாடான இலங்கை, இச்சுற்றுப் பயணத்தின்போது பெற்றுக் கொண்டதென்ன? சாதித்ததென்ன? என்றொரு கேள்வி எழுவது இயல்பே.

டெஸ்ட் ஆட்டங்கள் இரண்டில் முதலாவது ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவுடன் 'டிரா' செய்துகொண்ட இலங்கை இரண்டாவது ஆட்டத்தில் தோல்விகண்டது. அதேபோல் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 8இல் ஒன்றில் மட்டுமே வெற்றிபெற இலங்கையால் முடிந்தது. இலங்கை மேற்கொண்ட முதலாவது மிக நீண்ட நாள் கொண்ட சுற்றுப் பயணம் இதுவாகும். மேலும் இவ்வணியே மிகவும் இளைய அணியாகவும் காணப்படுகின்றது. அணித்தலைவரும், மிக இளையவராவார். இலங்கை அணியின் தோல்விக்குக் காரணமாக முக்கியமாகக் கூறப்பட்டது வீரர்களின் ஸ்திரமின்மை, பந்து வீச்சாளர், துடுப்பாட்டக்காரர் இருசாராருக்கும் இது பொருந்தும். அரவிந்த டீ சில்வா, அஸங்கா குருசிங்க போன்றோரே தொடர்ந்தும் ரண் குவிக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார்கள். ஏனையோர் இடைக்கிடை மட்டும் ஓட்டங்களைப் பெற்றார்கள். அரவிந்த கூட அவசியமான வேளைகளில் வீணாக விக்கெட் இழந்த சந்தர்ப்பங்கள் இலங்கைக்குப் பாதகமாக அமைந்தன.

### சிறந்த விக்கெட் காப்பாளர்

இலங்கையின் பீல்டிங் எப்போதும் சிறப்பாக அமைவது வழக்கம். இந்தச் சுற்றுப் பயணத்தில் அச்சிறப்பை இழந்ததென்றே சொல்லவேண்டும். சில ஒருநாள் போட்டிகளில் பீல்டிங் நன்றாக அமையாமை இலங்கைக்குப் பாதகமாக அமைந்தது. அஸந்த குருசிங்க மகாநாம போன்றோர் இத்தொடரில் நன்றாக பீல்டிங் செய்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். இத்தொடரில் இலங்கை புதியதொரு மிகச்சிறப்பான விக்கெட் காப்பாளரை உருவாக்கிக் கொண்டது. அவரே ஹசான் திலகரட்ண. காமினி விக்ரமசிங்க முதல் தர விக்கட் காப்பாளராகக்கொண்டு செல்லப்பட்டபோதும், கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய ஹசான் திலகரட்ண இன்று இலங்கையின் முன்னணி விக்கெட் காப்பாளராகப் பங்கெடுத்துள்ளார்.

### தோல்விக்குக் காரணங்கள்

இலங்கையின் தோல்விக்கு இன்னும் சில காரணங்கள் கூறப்படுகின்றன. அதிகளவு வீரர்கள் காயமடைந்தமை, வீரர்களின் வீடு பற்றியயோசனைகள், கால நிலை வேறுபாடு, நீண்டகாலத்தொடர்பு என்பன குறிப்பிடப்படுகின்றன. குறிப்பாக சிறந்த பந்து வீச்சாளர்களான ரவி ரட்ணாயக்க, கி ஹம்லப்ரோய் இருவரும் காயமடைந்தமை பெருமிழப்பாகும். றொமேஷ் ரட்ணாயக்கா, துடுப்பாட்ட வீரர் றொஷான் மகாநாம போன்றோரும் காயமடைந்தவர்களாகவே காணப்பட்டனர்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அதுலசமரசேகர முதலாவது முதல் தர ஆட்டமொன்றில் அபாரமாக ஆடி செஞ்சுரி போட்டார். பின்னர் அவரால் அவ்வளவு சோபிக்க இயலவில்லை. இவர் சிறீகாந்தின் சாயலில் ஆடக்கூடிய ஆட்டக்காரராவார். அர்ஜுன ரணதுங்க மோசமாக ஆடவில்லை என்றாலும்கூட கப்டன் என்ற வகையில் ஒரு ஆட்டத்தின் போக்கை மாற்றும் சக்தி வாய்ந்தவராகவே காணப்பட்டார். உதாரணமாக பல சந்தர்ப்பங்களில் விவியன் றிச்சர்ட்ஸ், அலன்போடர், இம்ரான் கான் போன்றோர் ஆடுவதைப்போல் ஆட இயலவில்லையென்று கூறலாம்.

இலங்கை தோல்வி கண்ட ஒருநாள் ஆட்டங்கள் மதிக்கப்படும் தோல்விகளாக அமைகின்றன. பாகிஸ்தான் அணியின் 316 ஓட்டங்களை விஞ்ச வேண்டிய நிலையில் ஆடிய இலங்கை 288 ஓட்டங்கள் வரையில் வந்தமை ஓர் உதாரணமாகும். இத்தொகை மிக்கௌரவமானதொரு எண்ணிக்கை ஆகும். வென்றிருக்க வேண்டிய இப்போட்டியில் இலங்கை தோற்கக் காரணம் சிலரது அவசரப் போக்கும், பதகளிப்பு நிலையுமாகும். மேலும் அனுபவக் குறைவையும், எதிரணித் தலைவர்கள் மிகுந்த அனுபவம் வாய்ந்தவர்களாக இருந்தமையையும் குறிப்பிட வேண்டும். இந்நிலைமைகளை தவிர்க்க நீண்ட நாள் தொடர் ஒன்றுக்குச் செல்லும் போது சில அனுபவம் வாய்ந்தவர்களைத் தெரிந்தெடுதிருக்க வேண்டும். துலீப் மெண்டிஸ் இவ்வணியில் இடம்பெற்றிருக்க வேண்டுமென்பது பலரின் கருத்தாகும். இடையில் பிரெண்டன குருப்பு இலங்கையில் இருந்து அழைக்கபபட்டமைக்குப் பதிலாக றோய் டயஸ் அழைக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்தும் உண்டு. இங்கு அனுபவமேமுதன்மைப் படுத்தப்படுவது தெரிகிறது. குருப்புவின் தெரிவு தொடர்பாகக் கிரிக்கெட் விமர்சகர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் பந்து வீச்சாளர்களே கூடுதலாகக் காயப்பட, பதிலாகத் துடுப்பாட்ட வீரர் அழைக்கப்பட்டமைநகைப்புக்குரியது என்றார்.

### டெஸ்ட் ஆட்டங்கள்

டெஸ்ட் ஆட்டங்களைப் பொறுத்தவரையில் முதலாவது டெஸ்ட் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது இது ஆட்டத்தில் அரவிந்த டீ சில்வா சிறப்பாகச் சதம் போட்டமையும் அவுஸ்திரேலிய அணியைவிட கூடுதலான ஓட்டங்களை முதல் இன்னிங்சில் இலங்கை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இவ்வளவு சிறப்பாக ஆடியமை நிச்சயம் மெச்சத்தக்கதே. இருந்தபோதிலும் 2 ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை தோல்வி கண்டது. இதற்குக் கப்டனின் சில பிழைகளே காரணம் என்று கூறப்படுகிறது. ஒன்று அவுஸ்திரேலியா அணியின் 224 ஓட்டங்களுக்குப் பதிலாக ஆடிய இலங்கை 4 விக்கெட் இழப்பிற்கு 186 ஓட்டங்கள் பெற்றிருந்த வேளையில் அவசியமற்ற முறையில அர்ஜுனா அவுட் ஆகியமையும் றொமேஷ் ரட்ணாயக்கா சிறப்பாகப் பந்து வீசிக்கொண்டிருந்த போது அவுஸ்திரேலியா அப்போது 2 விக்கெட்டுக்கு 32 என்ற நிலையில் இருந்தது. அவரை விடுத்து அசோகர் டீ சில்வாவை பந்து வீச கப்டன் அழைத்தமையையும் சுட்டுகிறார்கள். இருப்பினும் றொமேஷால் பந்துவீச முடியாத நிலையிலேயே அவரை மாற்றியதாக அர்ஜுனா ரணதுங்கா தம்பக்கம் நியாயத்தைக் கூறியுள்ளார். களத்தில் நின்று ஆடுவதைவிட வெளியில் நின்று விமர்சனங்கள் கூறுவது மிக எளிதானது என்பது ஒரு கசப்பான உண்மையாகும்.

### சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களில் இலங்கை

முடிவாகப் பார்க்கும்போது வெற்றி தோல்விகளுக்கப்பால் இலங்கை நன்றாகச் செய்திருப்பதாகவே தோன்றுகிறது. சர்வதேச கிரிக்கெட்டில் இன்று Profssionals உடனேயே மோதவேண்டியுள்ளது. இலங்கை வீரர்கள் அந்நிலையை இன்னும் எட்டவில்லை. வேறுநாடுகள் உள்நாட்டிலும் தொடர்ந்து கிரிக்கெட் ஆடிக்கொண்டிருக்கின்றன. இலங்கைக்கு அந்தச் சந்தர்ப்பங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. அத்தோடு எமது வீரர்கள் பெருமளவு பொருளாதார வளம் கொண்டவர்களும் அல்ல. இன்னொரு வகையில் கொழும்பு, காலி, கண்டி இன்றும் ஒரு சில நகரங்களில் மட்டுமே கிரிக்கெட் சிறப்பாக ஆடப்படுகிறது. எனவே தெரிவும் மட்டுப்படுத்தப்பட்டதே. பாடசாலை மட்டத்தின்பின் ஓரளவிற்கு நேரடியாக டெஸ்ட் அணிக்குள் இளைஞர் நுழையும் சூழ்நிலையே இங்கு காணப்படுகிறது. இவ்வாறான பாதகமான பல்வேறு சூழ்நிலைகளின் மத்தியிலும் சர்வதேசப் போட்டிகளில் இலங்கை சிறப்பாகவே செய்து கொண்டிருக்கிறது. பல்வேறு கிரிக்கெட் விமர்சகர்கள், சாவதேச கிரிக்கெட் தலைவர்கள் கருத்துப்படியும் இலங்கை விரைவில் பலமானதான நிலைக்கு வளரும் என கோடிட்டு காட்டுகிறார்கள். அது உண்மையும்கூட. அந்த வகையில் அர்ஜுனாரணதுங்காவும் ஏனைய வீரர்களும் இன்னொரு அடிமுன்னால் எடுத்து வைத்துள்ளனர் என்றே கூறவேண்டும்.

- நிர்மலன்

## கோவாவில் புதிய அரசு

(பனஜி)

கோவாவில், கோவா மக்கள் கட்சியின் சர்ச்சில் அல்மேயா தலைமயிலான ஐந்து உறுப்பினர் அமைச்சரவை நேற்றுக்காலை பதவியேற்றது.

இதற்கு முன்பாக கோவாவில் ஏழு இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏக்கள் கட்சியில் இருந்து விலகியதால் இந்திரா காங்கிரஸ் சிறுபான்மைக் கட்சியாகியது. இதனால் முதல்வர் பிரதாப் சிங்ரானே ராஜினாமாச் செய்தார். இதனைத்தொடர்ந்தே புதிய அமைச்சரவை பதவியேற்றது.

அதே வேளை மகராஷ்டிர வாதி கோமாந்தக் கட்சி, மக்கள் கட்சி அரசாங்கத்தை வெளியில் இருந்து ஆதரிக்கும் என கூறிபிருக்கிறது.

# விடுதலைப் போராட்டம் இன்று மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

## அன்னைபூபதி நினைவு தினக் கூட்டத்தில் பேச்சு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் ஆயுதம் மூலம் முன்னெடுக்கப்பட்ட விடுதலைப் போராட்டம் இன்று மக்கள் கரங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மக்கள்தான் இப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப்பிரதிநிதி தலைவா எஸ். கரிகாலன் மட்டக்களப்பு மாட்டத்தில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற அன்னை பூபதி இருவருட நினைவு தொடர்பான வைபவங்களில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அன்னை பூபதி நினைவாக உண்ணாவிரதங்கள், கருத்தரங்குகள், சிரமதானங்கள், அன்னதானங்கள் நடைபெற்று வருகின்றன.

இவ்வைபவங்களில் அவர் உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது,

அன்னைபூபதி தனது சாத்வீக போராட்டத்தை பல நெருக்கடிகள் மத்தியில் மேற்கொண்டார். அன்றைய சூழ்நிலையில் இத்தகையபோராட்டங்களில் ஈடுபட எவரும் முன்வராத நேரத்தில் அன்னை பூபதி முன் வந்தார் என்பதை தமிழ் மக்கள் மறந்துவிடவில்லை.

அன்று சாத்வீக நாடு இந்தியா என சர்வதேச ரீதியில் புகழ்பெற்றது. ஆனால் அன்னையின் சாத்வீக கோரிக்கையை ஏற்க மறுத்ததன் மூலம் இன்று சாத்வீகத்தை படுகொலை செய்த நாடு என்ற இடத்தைப்பெற்றுள்ளது.

அன்னையின் போராட்டம் நியாயமானது. தமிழ் மக்களை உண்மையில் பாதுகாக்க நவர்களென்றால் நிச்சயம் அன்னைபூபதியின் கோரிக்கைகளை அன்று ஏற்றுக்கொண்டிருக்கும். ஆனால் தமிழ் மக்களை பாதுகாக்கவந்தவர்கள் அல்ல. என்ற முகமூடியை அன்னை கிழித்தெறிந்து விட்டார் என்றார்.

# ஆசிரியர்கள் கடமை உணர்வுடன் நடக்க வேண்டும்

(பண்டத்தரிப்பு)

ஆசிரியர்களின் பொறுப்பும் பணியும் மதிப்பிட முடியாததொன்று. எமது எதிர்கால சந்ததி, இனம் அபிவிருத்தியும் மேன்மையும் அடையஆசிரியர்களின் கல்விக் கரிசனை, கண்ணியம், கடமையுணர்வுடன் செயற்படுதல் இன்றியமையாத விடயம்.

இவ்வாறு மருதனாமடம் கல்விக் கோட்டத்தின் உதவிப் பணிப்பாளர் திரு. ஆர் கே. குலசேகரம், புத்தூர் கொத்தணி ஆசிரியர் தினத்தில் கலந்துரையாற்றுகையில் தெரிவித்தார்.

புத்தூர் மெதடிஸ்மிசன் தமிழ் வித்தியாலய அதிபரும் இலங்கை தமிழர்ஆசிரியர் சங்கத்தின் கோப்பாய்கிளைத் தலைவருமான எஸ். தம்பிராசா தலைமையில் வைபவம் சிறப்பாக நடைபெற்றது.

புத்தூர் கொத்தணி ஆசிரியர்களை கௌரவப்படுத்தும் விழாவாக இதுஅமைந்தது ம்.

லீவு எடுக்காத ஆசிரியர்கள் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் இவ்வைபவத்தில் கௌரவிக்கப்பட்டனர்.

வலிகாமம் கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு முருகேசம்பிள்ளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க கௌரவ பொதுச் செயலாளர் திரு.க. மதரிசிசிவம்,நிருவாகச் சொயலாளரும் உடற்கல்வி வித்தியாலங்களில் ஒருவருமான திருத. அருணகிரிராசா ஆகியோர் சிறப்புவிருந்தினர் களாக கலந்து புத்தூர் சொத்தணியின் ஆசிரிய தின கொண்டாட்டத்தை முன்மாதிரியானது எனப் பாராட்டினார். கொத்தணியின் அனைத்து ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

இறுதி நிகழ்ச்சியாா ஆசிரியாகளின்கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (1)

# காரைதீவில் மக்கள் முன்னணி அலுவலகம்

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அலுவலகம் அண்மையில் காரைதீவில் திறந்து வைக்கப்பட்டது.

முன்னணியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் திரு. கஸ்ரோ திறந்து வைத்தார். (37)

# வலிகாமப் பகுதியில் அன்னை பூபதிக்கு அஞ்சலி

(சுழிபுரம்)

மனிதாபிமானத்தை நிலைநாட்டவும் சமாதானத்தை கோரியும் உண்ணா நோன்பிருந்து தன் இன்னுயிரை நீத்த அன்னை பூபதிக்கு வலிகாமம் மேற்குப் பகுதியிலுள்ள சகல கிராமங்களிலும் உளப்பூர்வமான அஞ்சலியை மக்கள் செய்து வருவதை அவ்வப் பகுதிகளில் உள்ள அன்னையின் திருவுருவப் படங்களுக்கு மாலை அணியித்தும், தோரணங்கள் கட்டியும், குத்துவிளக்கேற்றியும் செய்து வருவதன்மூலம் காணக் கூடியதாகவுள்ளது. பிரதான சந்திகளிலும், பொது இடங்களிலும் அஞ்சலிக்குரிய வகையில் அன்னை பூபதியின் படங்கள் மலர்மாலைகளுடன் காட்சியளிக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (17)

## தமிழ் முஸ்லிம்கள் குடியேற்றம்

மகாவலிப்பிரதேசத்தில் தமிழ் முஸ்லிம்கள் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. நாட்டில் உள்ள சகல அரசாங்க அதிபர் பிரிவுகளைச்சேர்ந்த பதினான்காயிரம் பேர்இங்குகுடியமர்த்தப்படவுள்ளளனர்.

மகாவலி பீ. வலய வலது கரையில் இருபத்தைந்து வீத காணி தமிழ் முஸ்லிம்களுக்கு வழங்கப்படவுள்ளது.

# உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பயிற்சி முகாம்

(கரவெட்டி)

பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட லீக் எதிர்வரும் ஏப்ரல் மாதம் மத்தியஸ்தர் பயிற்சிமுகாம் ஒன்று அமைக்க ஏற்பாடு செய்துள்ளது.

இப்பயிற்சி முகாமின் மூலம் உள்ளூரில் இலைமறைகாயாய் மறைந்து கிடக்கின்ற இளைஞர்களுக்குப் போதிய நடுநிலைமைப் பயிற்சியளித்து அவர்களின் மூலம் உள்ளூரில் நடைபெறுகின்ற போட்டிகளை திறம்பட நடாத்துவதாகும்.

எனவே மேற்படி மத்தியஸ்தர் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளவுள்ள இளைஞர்கள் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் திரு. எஸ். கே. இராசேந்திரத்துடம் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர். (18)

# பனை பற்றியும் அதனை பயன் படுத்துவோர் பற்றியும் ஆய்வு

பனை அபிவிருத்திச்சபை- ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச்சபை அனுசாணையுடன் பனைவள அபிவிருத்தி ஆய்வரங்கொன்றைத் தொடங்கவுள்ளது. பனை மரங்களின் எண்ணிக்கை - அவற்றின் தன்மைகள் அவற்றின் நிலப் பரப்புதொடர்பாகவும்,பனையினை நம்பி வாழும் குடும்பங்கள் பற்றிய சமூக பொருளாதார நிலமைகளையும் பற்றிய ஆய்வுகள் வெளிக்கள தகவல்களின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாய்வு கிராமசேவகர் பிரிவுகள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் என்ற அடிப்படையிலே திட்டமிடப்பட்டுள்ளன. மேலும், பனம் பொருள் சந்தைப்படுத்துதல் அதனுடன் தொடர்பான குடிசைக் கைத்தொழில்களின் வளர்ச்சி, பெண்களின் பங்களிப்பு, பனம்பொருள் அபிவிருத்தியில் தொழில் நுட்பத்தின பங்களிப்பு முதலான விடயங்கள் பற்றியும் ஆய்வுகள் தொடங்கியுள்ளன.

வியாபாரம் பெருக
விளபரம் செய்க

புதுவருட வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகுக!

புதுவருட உடுப்புக்கள்

சேட்டிங், சூட்டிங்

கூறைச் சேலைகள்

யா ற்றிற்கும் நீங்கள்

நாடவேண்டிய இடம்

மரினா ரெக்ஸ்ரையில்

30, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

(B/434)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1990 ஏப்ரல் 27ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. தற்காலிக உதவி விரிவுரையாளர்

மெய்யியல்
நாடகமும் அரங்குக் கலைகளும்
நுண்கலைகள் பற்றிய வரலாறு
கிறிஸ்தவ நாகரீகம்
அரபு மொழியும் இஸ்லாமிய நாகரீகமும்
ஆங்கில இலக்கியம்
புவியியல்
இந்து நாகரீகம்
பொருளியல்
அரசறிவியல்
வர்த்தகமும் முகாமைப் படிப்புக்களும்
தமிழ்
சித்த மருத்துவம்

2. தற்காலிக போதனாசிரியர்

ஆங்கிலம் — மிருதங்கம்
கர்நாடக வாய்ப்பாட்டு — பரத நாட்டியம்

3. தற்காலிக கட்டுரை ஆசிரியர்

சமஸ்கிருதம் — சரித்திரம்
புவியியல்

4. தற்காலிக செய்முறை காட்டுநர்

சித்த மருத்துவம்

5. இடைவரவு விரிவுரையாளர்

நாடகமும் அரங்குக் கலைகளும்
அரபு மொழியும் இஸ்லாமிய நாகரீகமும்
கிறிஸ்தவ நாகரீகம்
ஆங்கில இலக்கியம்
நில அளவீடு (புவியியல்)
சட்டம்
முகாமைத்துவமும் ஒழுங்கமைப்பு நடத்தையும்
கணக்கியலும் கணக்காய்வும்
வரி விதிப்பு
சமஸ்கிருதம்

6. இடைவரவுப் போதனாசிரியர்

கர்நாடக வாய்ப்பாட்டு — மிருதங்கம்
வயலின் — பரதநாட்டியம்
வீணை

குறிப்பு: சரித்திரத்தில் தற்காலிக கட்டுரை ஆசிரியர்

பரீட்சையின் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்பவர்

முன்னணியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் திரு. கஸ்ரோ திறந்து வைத்தார். (37)

ராசா தலைமையில் வைபவம் சிறப்பாக நடைபெற்றது.

புத்தூர் கொத்தணி ஆசிரி

இறுதி நிகழ்ச்சியாக ஆசிரி யாகளின்கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (1")

## வலிகாமப் பகுதியில் அன்னை பூபதிக்கு அஞ்சலி

(சுழிபுரம்)

மனிதாபிமானத்தை நிலை நாட்டவும் சமாதானத்தை கோரியும் உண்ணா நோன்பி ருந்து தன் இன்னுயிரை நீத்த அன்னை பூபதிக்கு வலி காமம் மேற்குப் பகுதியிலுள்ள சகல கிராமங்களிலும் உளப் பூர்வமான அஞ்சலியை மக்கள் செய்து வருவதை அவ்வப் பகுதிகளில் உள்ள அன்னை யின் திருவுருவப் படங்களுக்கு மாலை அணியித்தும், தோர ணங்கள் கட்டியும், குத்து விளக்கேற்றியும் செய்து வருவதன்மூலம் காணக் கூடியதாகவுள்ளது. பிரதான சந்திக ளிலும், பொது இடங்களிலும் அஞ்சலிக்குரிய வகையில் அன்னை பூபதியின் படங்கள் மலர்மாலைகளுடன் காட்சி யளிக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (17)

## தமிழ் முஸ்லிம்கள் குடியேற்றம்

மகாவலிப்பிரதேசத்தில் தமிழ் முஸ்லிம்கள் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படவுள்ளது. நாட்டில் உள்ள சகல அரசாங்க அதிபர் பிரிவுகளைச்சேர்ந்த பதினான் காயிரம் பேர்இங்குகுடியமர்த் தப்படவுள்ளனர்.

மகாவலி பீ. வலய வலது கரையில் இருபத்தைந்து வீத காணி தமிழ் முஸ்லிம்களுக்கு வழங்கப்படவுள்ளது.


❀ சேட்டிங், ❀ சூட்டிங்

❀ கூறைச் சேலைகள்

யா ற்றிற்கும் நீங்கள்

நாடவேண்டிய இடம்

**மரினா ரெக்ஸ்ரையில்**

30, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

(B/434)



நாடகமும் அரங்குக் கலைகளும்
அரபு மொழியும் இஸ்லாமிய நாகரீகமும்
கிறிஸ்தவ நாகரீகம்
ஆங்கில இலக்கியம்
நில அளவீடு (புவியியல்)
சட்டம்
முகாமைத்துவமும் ஒழுங்கமைப்பு நடத்தையும்
கணக்கியலும் கணக்காய்வும்
வரி விதிப்பு
சமஸ்கிருதம்

6. இடைவரவுப் போதனாசிரியர்

கர்நாடக வாய்ப்பாட்டு — மிருதங்கம்
வயலின் — பரதநாட்டியம்
வீணை

குறிப்பு: சரித்திரத்தில் தற்காலிக கட்டுரை ஆசிரியர்

பரீட்சையின் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்பவர் களும் விண்ணப்பிக்கலாம்.

இப் பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக் கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப் படல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களைப் பெற விரும்புவோர் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட 23 X 10 செ. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள் அரச கூட்டுத்தாப னங்கள், நியதிச் சட்டசபைகளிலுள்ள விண்ணப்பதாரி கள் தமது நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
23. 03. 1990

B/427



புதுவருட வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகுக!

நீங்கள் புதுவருட உடுப்பு வகைகளை அழகாக தைக்க வேண்டுமா?

**அமீர் ரெக்ஸ் ரெயிலறிங்**

73, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(B/432)



"ஆதீபன்" என்ரபிறைஸ்

"COOL BAR"

மெயின் வீதி, பெரிய கல்லாறு - 01

கல்லாறு.

இங்கே, கொக்கோ கோலா, பன்ரா, பொட்டலோ ஸ்பிரைற், மற்றும் யானை மார்க் பானங்கள் மொத்தமாகவும், குளிரூட்டப்பட்ட எல்லாவித (மது அல்லாத) பானங்களும் மாஜரின் உட்பட ஈழநாதம் பத்திரிகையும் விற்கப்படும்.

(B/440)



எமது வாடிக்கையாளர் களுக்கு புதுவருட வாழ்த் துக்கள் உரித்தாகுக!

ஈழநாதமே வாழ்க!

எலெக்ரிக்வெல்டிங்,
Gas வெல்டிங்
செய்துகொடுப்பவர்

**சிவம் வெல்டிங்ஸ்**

370, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(B / 418)



புதுவருட வாழ்த்துக்கள்

அனைவருக்கும் உரித்தாகுக!

**த ஸ்ரான்லி சைனிஸ் ரெஸ்ரூரண்ட்**

60, ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்.

(B/436)



லங்கா லிமிடெற் J. L. M. சிலோன் லிமிட்டெற்

B. C. C பாட்டா கொம்பனி சிலோன் லிமிட்டெற்

ஆகியவற்றின் ஏக விநியோகஸ்தர்கள்

**S. சின்னத்துரை அன் பிறதர்ஸ்**

39, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(B/433)

## சிந்தனைக்கு

ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்.

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 28 - 03 - 90

# கிழக்கை புனரமையுங்கள்

மட்டக்களப்பு மாவட்டம் இன்னும் பல வழிகளிலும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கான திட்டங்கள் சில மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை நிறைவேற்றப்படவில்லை.

சூறாவளி, மழை, வெள்ளம் போன்ற இயற்கை அழிவுகள் மட்டக்களப்பு மாவட்டத்தில்தான் தன் கைவரிசையை காட்டுவதுண்டு

அரசியல்வாதிகளும் பேரினவாதிகளும் இனக் கலவரங்களைத் தூண்டிவிடுவதும் இங்குதான்.

சூறாவளி ஏற்படுத்திய பேரழிவின் சுவடுகள் இன்னமும் இருக்கின்றன.

ஸ்ரீலங்கா அரசபடை இம்மாவட்டத்தில் செய்த அட்டூழியங்கள் அதிகம். இதன்பின் வந்த இந்திய இராணுவமும் அட்டூழியத்தில் சளைக்கவில்லை.

விவசாயமும் கடற்றொழிலும்தான் இப்பகுதி மக்களின் பிரதான தொழில்கள்.

தொடர்ந்த இராணுவ நடவடிக்கைகளினால் விவசாயமும் கடற்றொழிலும் வெகுவாகப் பாதிக்கப் பட்டது. மக்கள் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்தனர். இன்றும் அவர்களின் பொருளாதாரம் பெரிதாக மேம்படவில்லை.

பத்துலட்சம் பதினைந்துலட்சம் வீடுகள் என்று வீடமைப்புத் திட்டங்களை பிரதமராக இருந்தபோதே ஜனாதிபதி பிரேமதாசா ஆரம்பித்து வீடில்லாத பெருந் தொகையான மக்களுக்கு வீடு கிடைக்க வழி செய்திருக்கிறார்.

ஆனால் இந்த வீடமைப்புத் திட்டங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் குறைகளைத் தீர்க்கவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்றும் எந்தவித

---

## இந்திய - புலிகள் போர்: ஒரு கண்ணோட்டம் - 3

◯ வரட்டுக் கௌரவம் ◯ புலிகள் பற்றிய தப்புக்கணக்கு ◯ தவறான போர்முறைத் திட்டம்

# இந்தியாவின் தோல்விக்குக் காரணம்

இந்திய - புலிகள் போரில் இந்தியா சந்தித்த தோல்விக்குப் பல்வேறு காரணிகளை முன்வைக்கலாம்.

இந்திய பிரதமரதும் இந்திய ராஜதந்திரிகளதும் வரட்டுக் கௌரவம்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆட்பலம், ஆயுத பலம், ஆன்ம பலம், மக்கள் பலம், என்பனபற்றி இந்திய அரசு போட்டிருந்த தப்புக் கணக்கு.

இராணுவ ஆட்பலத்தை பாரிய அளவில் பெருக்கிவிட்டால் குறுகிய காலத்தில் வெற்றியை அடைந்து விடலாம் என்ற தவறான போர் முறைத் திட்டம்.

மாக அமைந்தது. பிரபாசரன் என்ற ஒரு தனி மனிதன் இந்திய சாம்ராஜ்யத்தையே ஆட்டிப் படைப்பதாக ராஜீவ்காந்தி கருதினார். இந்தியப் பிரதமரின் வரட்டுக் கௌரவத்தால் ஏற்பட்ட தனிப்பட்ட ஆத்திரமும் டில்லியின் ராஜதந்திர அணுகு முறைகளை மாசுபடுத்தியது.

இந்திய - புலிகள் போர் ஆரம்பமான காலத்திலிருந்தே எமது தலைவர் திரு. பிரபாசரன் போர் நிறுத்தமும் நேரடிப் பேச்சும் கோரி பாரதப் பிரதமர் பலருக்கு கடிதங்களை எழுதினார். ஆனால் இந்திய அரசு எமது கோரிக்கைகளை நிராகரித்ததுடன் இந்திய - இலங்கை

கிறதே'' என்றாராம். அதைக் கேட்டு ஆத்திரமடைந்த டிக்ஸிட் ''இந்தியா நினைத்தால், நான் இந்த சுங்கானைப் புகைத்து முடிப்பதற்குள் விடுதலைப் புலிகளை முற்றாக அழித்து விடும்'' என்றாராம்.

இதிலிருந்து ஒன்று தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. இந்தியப் பிரதமரும், இந்திய ராஜதந்திரிகளும் இராணுவ பலத்தைக் கொண்டு புலிகள் இயக்கத்தையும் அதன் தலைமையையும் அழித்துவிட வேண்டுமென்று விடாப்பிடியாக நின்றார்களே தவிர, எமது மக்களின் நலனிலும், எதிர்காலத்திலும் எவ்வித அக்கறையும்

> ''தென்னாசியாவின் வல்லாதிக்க சக்கரவர்த்தியாக அகம்பாவம் கொண்டிருந்த ராஜீவ் காந்திக்கு ஒரு சிறிய இயக்கம் விடுத்த சவால் ஒரு பெரிய அவமானமாக அமைந்தது. பிரபாகரன் என்ற ஒரு தனிமனிதன் இந்திய சாம்ராஜ்யத்தையே ஆட்டிப்படைப்பதாக ராஜீவ் கருதினார். இந்தியப் பிரதமரின் வரட்டுக் கௌரவத்தால் ஏற்பட்ட, தனிப்பட்ட ஆத்திரமும் டில்லியின் ராஜநந்திர அணுகு முறையை மாசுபடுத்தியது.''

பொதுமக்கள் மீதான அடக்குமுறையை தீவிரப்படுத்தி, அவர்களை பயமுறுத்தி பணியவைத்து, புலிகளை மக்களிடமிருந்து அந்நியப்படுத்தி விடலாமென்ற தப்பான தந்திரோபாயம்.

நிபந்தனையற்ற பேச்சுக்களை நிராகரித்து விட்டு ஏற்க முடியாத நிபந்தனைகளுடன் தற்காலிக போர்நிறுத்தங்களை அறிவித்து வந்தமை.

இராணுவ அழுத்தத்தை காட்டி பேச்சுக்களில் பணிய வைக்கலாமென்ற சூத்திரதார அணுகுமுறை.

பலம்பொருந்திய இராணுவ சக்திமூலம் தனது அந்தரங்க குறிக்கோள்களை அடைய முடியாமல் போனதால் டில்லி ஆட்சிபீடம் புலிகள் இயக்கம் மீது ஆத்திரமடைந்தது. அண்டை நாடுகள் அஞ்சிநடுங்

ஒப்பந்தத்தை நாம் நிபந்தனையற்றமுறையில்ஏற்கவேண்டுமென்றும்ஆயுதங்களை கையளித்துவிட்டு சரணடைய வேண்டுமென்றும் நிபந்தனைகளை விதித்து வந்தது. நாம் சமாதானம் கோரிய போதெல்லாம் அது பலவீனத்தின் அறிகுறி என தவறாக கணக்குப் போட்டு, இந்திய அரசு இராணுவத் தாக்குதல்களை மேலும் தீவிரப்படுத்தியது. விடுதலைப் புலிகளை முற்றாக ஒழித்துக்கட்ட வேண்டுமென இந்தியா கங்கணம்கட்டி நின்றது.

ஒருமுறை தி மு க. தலைவர்களில்ஒருவர்டில்லியில் பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தியை சந்தித்து விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்தம் செய்து நிபந்தனையற்ற முறையில் அவர்களுடன் பேச்சு

காட்டவில்லை யாழ்ப்பாணப் போரில் முதற்கட்டமாக எமது தலைவர் பிரபாகரனை கொலை செய்துவிட இந்திய அரசு சதித்திட்டம் தீட்டியது.

யாழ். பல்கலைகழகத்திற்கு சமீபமாக பிரம்படி ஒழுங்கையிலுள்ள ஒரு வீட்டில் எமது தலைவர்தங்கியிருந்தார். திடீரென அந்த வீட்டைச் சுற்றி வளைத்து எமது தலைவரைக் கொலை செய்துவிடுவதுதான் இந்திய இராணுவத்தின் திட்டம். இத்திட்டத்தின் பிரகாரம் இரு விசேட இந்திய அதிரடிப்படைக் குழுவினர் 12- 10-1987அன்று அதிகாலையில் பிரபாகரனின் இல்லத்திற்கு சமீபமாக ஹெலிகளில் இறங்கினர். 13ஆவது சீக்கிய காலாட்படையைச் சேர்ந்த 50பேர் கொண்ட விசேட அதிரடிப்படை அணியொன்று

> இக் கட்டுரை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு வெளியீட்டு வாரித்தால் வெளியிடப்பட்டது.

கும்பெரியதொரு வல்லரசு ஒரு சிறிய பூகோளப்பரப்பில் ஒரு

வார்த்தை நடத்துமாறு மன்றாடினார். அப்பொழுது

கொக்குவில் கிராம சபைக்கு அருகிலுள்ள வெளியில் இறங்

தச் சண்டையில் இந்திய அதிரடிப்படை முற்றாக அழிக்கப்பட்டது. இந்தச் சண்டை நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் கொக்குவில் கிராம சபைக்கு அருகாமையில் இறங்கிய சீக்கிய அதிரடிப் படையினர் ஏற்கனவே திட்டமிட்டபடி பிரம்படி ஒழுங்கையால் பிரபாகரனின் இல்லத்தை நோக்கி விரைந்தனர். இந்தியப் படையினருக்கும், புலிகளுக்கும் இடையே கடும் போர் மூண்டது. இந்தச் சண்டையில் பலத்த உயிர் இழப்புகளுடன் இந்தியப் படையினர் பின்வாங்கி ஓடினர். பின்வாங்கிச் சென்ற இந்திய இராணுவத்தினர் அப்பாவிப் பொதுமக்களைச் சுட்டுக் கொன்று அவர்களது பிணங்கள்மீது டாங்கிகளை ஏற்றிச் சென்றனர். பிரம்படிச் சண்டையில் 40 பொதுமக்களும் 37 இந்திய அதிரடிப் படை வீரர்களும் கொல்லப் பட்டனர் பிரபாகரனைக் கொலை செய்துவிடும் இந்திய அரசின் நாசகார சதி முறியடிக்கப்பட்டது. இந்திய அரசு ஓய்ந்துவிடவில்லை. கடந்த இரண்டு வருடங்களாக பிரபாகரனையும் ஏனைய தலைவர்களையும் அழித்துவிடும் நோக்கில் இந்திய அரசு எத்தனையோ பாரிய படையெடுப்புக்களைத் திட்டமிட்டு நடத்தியது. பல்லாயிரக்கணக்கில் இந்திய இராணுவத்தினர் தமிழீழக் காடுகளைச் சுற்றி வளைத்து தாக்குதல்களை நடாத்தினர். இந்தச் சண்டைகளில் எல்லாம் இளம்புலி வீரர்களின் தீர்க்கமான எதிர்த் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் இந்திய இராணுவம் பின்வாங்கியது. இந்திய வல்லரசின் இராணுவ பலத்தால் புலிகளின் தலைமையை அழித்துவிட முடியவில்லை.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள முக்கிய நகரங்களிலும், பட்டினங்களிலும், கேந்திர ஸ்தானங்களினும், பிரதான வீதிகளிலுமாக 600க்கும் அதிகமான இராணுவ முகாம்களை நிறுவி, தனது பாரிய இராணுவக் குடையை தமிழீழம்மீது விரித்து வைக்க

ரடித் தாக்குதல்களிலும் கைதேர்ந்த புலிப் படை வீரர்கள் எதிரிப் படைகளை தமது பிரதேசத்திற்குள் நுழைய விடாது தீரத்துடன் போராடி வந்தனர். புலிகளின் கெரில்லாப் போர் நுட்பம் கூர்மையடைந்து வந்தது ஒருபுறமிருக்க, இந்திய இராணுவ தரப்பில் உயிர்ச்சேதம் பெருகி வந்ததும் இந்திய ஆட்சியாளருக்கும், இந்திய இராணுவ தலைமைப்பீடத்திற்கும் பெரும் சவாலாக அமைந்தது. உலகின் ஒரு மிகப் பெரிய இராணுவம் புலிகளைச் சமாளிக்க முடியாது. திணறுவதை உலக நாடுகள், குறிப்பாக தென்னாசிய நாடுகள் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தமையும் இந்தியாவுக்கு சங்கடத்தைக் கொடுத்தது. தேசிய இராணுவ சௌரவத்தையும் பிராந்திய வல்லரசு அந்தஸ்தையும் கட்டிக்காக்கவேண்டும் என்ற பார்வை டில்லியில் மேலோங்கியது. இதன்படி புலிகளை இராணுவ ரீதியில் ஒழித்துக்கட்ட இந்திய அரசு தீர்மானித்தது. புலிகளின் நிலைகள் மீது அலையலையாக படையெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. திரிசூலம், வச்சிரா, மகாகீர்த்தி, செக்மேட் ஒன்று, இரண்டு, 'பாஸ்' ஸ்திராம், இப்படியாகப் பெரும் இராணுவ தாக்குதல்களை இந்தியா புலிகள் மீது கட்டவிழ்த்து விட்டது. பீரங்கிகளும் மோட்டார்களும் இராப் பகலாக இடைவிடாது புலிகளின் நிலைகள் மீது குண்டுமாரி பொழிந்தன. போதாக்குறைக்கு இராணுவ ஹெலிகாப்டர்கள் புலிகளின் தளங்கள் மீது நூற்றுக்கணக்கில் 250 கிலோ ராட்சதக் குண்டுகளை வீசின. புயலாக வீசிய இந்திய படையெடுப்புகளை சளையாது நின்று எதிர்த்தது புலிப்படை புலிகளின் பாசறைக் குகைக்குள் நுழையமுடியாது இந்திய படைகள் பின்வாங்கின.

### பாராளு- உறுப்பினர்களுக்கு தலா 25 லட்சம் ரூபா

(கொழும்பு)

பர்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ரூபா 25 லட்சம் வளங்கப்படவுள்ளது என நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் அரசாங்க அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

### கிழக்கில் நினைவு தூபிகள்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உயிர் இழந்த தியாகிகள் நினைவு

விவசாயமும் கடற்றொழிலும்தான் இப்பகுதி மக்களின் பிரதான தொழில்கள்.

தொடர்ந்த இராணுவ நடவடிக்கைகளினால் விவசாயமும் கடற்றொழிலும் வெகுவாகப் பாதிக்கப் பட்டது. மக்கள் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்தனர். இன்றும் அவர்களின் பொருளாதாரம் பெரிதாக மேம்படவில்லை.

பத்துலட்சம் பதினைந்துலட்சம் வீடுகள் என்று வீடமைப்புத் திட்டங்களை பிரதமராக இருந்தபோதே ஜனாதிபதி பிரேமதாசா ஆரம்பித்து வீடில்லாத பெருந் தொகையான மக்களுக்கு வீடு கிடைக்க வழி செய்திருக்கிறார்.

ஆனால் இந்த வீடமைப்புத் திட்டங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் குறைகளைத் தீர்க்கவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்றும் எந்தவித வசதியுமற்ற ஓலைக்குடிசைகளில் வாழ்ந்து ''சீவியத்தைப் போக்கும்'' மக்களையே பெருமளவில் காணலாம்.

மட்டக்களப்புக்கு பாராளுமன்றப் பிரதிநிதிகளாக இதுவரை இருந்தவர்களும் சரி சமீப காலத்தில் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்களும் குறுகிய காலத்தில் ''வாய்ப்பந்தல் போட்ட'' மாகாண சபை உறுப்பினர்களும்சரி மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தியையோ மக்களின் வாழ்க்கைத்தரத்தையோ உயர்த்துவதில் உண்மையான அக்கறை செலுத்தவில்லை.

இந்த நிலை இனியும் நீடிக்கக் கூடாது. மட்டக்களப்பு மாவட்டத்தின் விவசாயம், கடற்றொழில், கைத்தொழில்களை துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கு ஒழுங்கான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

வெளிநாடுகளிலுள்ள நிறுவனங்கள் புனர் நிர்மாணத்துக்கென வழங்கிய பணம் பெருமளவில் செலவிடப்படாமலிருக்கிறது. இன்னும் வேண்டிய பணம் கொடுத்து உதவவும் வெளிநாட்டு நிறுவனங்கள் தயாராக இருக்கின்றன.

எனவே சரியான திட்டங்களைத் தீட்டி விவசாயம், கடற்றொழில் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் புதிய புதிய கைத்தொழில்களையும் அங்குள்ள மூலப்பொருள்களைப் பயன்படுத்தி ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சில வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு கடந்தகால சம்பவங்களால் நிறைவேற்றப்படாமல் தடைப்பட்டு நிற்கும் வாழைச்சேனை மீன்பிடித்துறைமுகம் அரச அச்சகக்கிளை நிறுவனம், சித்தாண்டி ஆலைகள் தொகுதி ஆகியவற்றைப் பூர்த்தி செய்வதே தமது முதல் வேலை என்றும் மட்டக்களப்பு மாவட்ட புதிய அரச அதிபர் கூறுகிறார்.

நல்லமுயற்சி, இவற்றுடன் புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்கவும் வீடில்லாத ஏழை எளிய மக்களுக்கு வீடு கிடைக்கவும் அரசாங்க அதிபர் முயற்சி செய்ய வேண்டும். இதற்குப் பொதுமக்களும் உதவியும் ஒத்துழைப்பும் வழங்க வேண்டும். மக்கள் நினைத்தால் ஆகாதது ஒன்றுண்டா?

---

தந்தி ராபாபம்.

நிபந்தனையற்ற பேச்சுக் களை நிராகரித்து விட்டு ஏற்க முடியாத நிபந்தனைகளுடன் தற்காலிக போர்நிறுத்தங் களை அறிவித்து வந்தமை.

இராணுவ அழுத்தத்தை காட்டி பேச்சுக்களில் பணிய வைக்கலாமென்ற சூத்திரதார அணுகுமுறை.

பலம்பொருந்திய இராணுவ சக்திமூலம் தனது அந்தரங்க குறிக்கோள்களை அடைய முடியாமல் போனதால் டில்லி ஆட்சிபீடம் புலிகள் இயக்கம் மீது ஆத்திரமடைந்தது. அண்டை நாடுகள் அஞ்சிநடுங்கும்பெரியதொரு வல்லரசு ஒரு சிறிய பூகோளப்பரப்பில் ஒரு சிறிய இயக்கத்துடன் நீண்ட காலப் போர் நடத்தி தோல்வியை சந்தித்துவந்தமையை இந்திய ஆட்சியாளரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை, தென்னாசியாவின் வல்லாதிக்க சக்கரவர்த்தியாக அகம்பாவம் கொண்டிருந்த ராஜீவ்காந்திக்கு ஒரு சிறிய இயக்கம் விடுத்த சவால் ஒரு பெரிய அவமான

நாம் சமாதானம் கோரிய போதெல்லாம் அது பலவீனத் தின் அறிகுறி என தவறாக கணக்குப் போட்டு, இந்திய அரசு இராணுவத் தாக்குதல் களை மேலும் தீவிரப்படுத் தியது. விடுதலைப் புலிகளை முற்றாக ஒழித்துக் கட்ட வேண்டுமென இந்தியா கங் கணம்கட்டி நின்றது.

ஒருமுறை தி மு க. தலைவர் களில்ஒருவர்டில்லியில் பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தியை சந் தித்து விடுதலைப் புலிகளு டன் போர்நிறுத்தம் செய்து நிபந்தனையற்ற முறையில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு மன்றாடினார். அப்பொழுது ராஜீவ் காந்தி உணர்ச்சிவசப் பட்டு ''பிரபாகரனை'' எனது காலடியில் விழுத்துகிறேனா இல்லையா பாருங்கள்'' என்று கத்தினாராம்.

இலங்கைக்கான முன்னாள் இந்திய தூதுவர் டிக்ஸிட்டை இந்திய பத்திரிகையாளர் ஒருவர் சந்தித்து, ''புலிகளிடம் இந்திய இராணுவம் உதைவாங்குவதுபோல் தெரி

சமீபமாக பிரம்படி ஒழுங்கை யிலுள்ள ஒரு வீட்டில் எமது தலைவர் தங்கியிருந்தார். திடீ ரென அந்த வீட்டைச் சுற்றி வளைத்து எமது தலைவரைக் கொலை செய்துவிடுவதுதான் இந்திய இராணுவத்தின் திட் டம். இத்திட்டத்தின் பிர காரம் இவ் விசேட இந்திய அதிரடிப்படைக் குழுவினர் 12-10-1987அன்று அதிகாலை யில் பிரபாகரனின் இல்லத் திற்கு சமீபமாக ஹெலிகளில் இறங்கினர். 13ஆவது சீக்கிய காலாட்படையைச் சேர்ந்த 50பேர் கொண்ட விசேட அதி ரடிப்படை அணியொன்று கொக்குவில் கிராம சபைக்கு அருகிலுள்ள வெளியில் இறங் கியது. முப்பது அதிரடிப் படைகளைக் கொண்ட இன் னொரு அணி யாழ்.பல்கலைக் கழக வளாகத்திற்குள் இறங் கியது. யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு அரு காமையில் இறங்கிய இந்திய அதிரடிப் படையினரை விடு தலைப் புலி வீரர்கள் எதிர் கொண்டு தாக்கினர். பல மணி நேரங்கள் நடைபெற்ற இந்

யெடுப்புக்களைத் திட்டமிட்டு நடத்தியது. பல்லாயிரக்கணக் கில் இந்திய இராணுவத்தினர் தமிழீழ காடுகளைச் சுற்றி வளைத்து தாக்குதல்களை நடாத்தினர். இந்தச் சண்டை களில் எல்லாம் இளம்புலி வீரர்களின் தீர்க்கமான எதிர்த் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் இந்திய இராணுவம் பின்வாங்கியது. இந்திய வல்லரசின் இராணுவ பலத்தால் புலிகளின் தலை மையை அழித்துவிட முடிய வில்லை.

வடக்கு கிழக்கு மாகாணங் களிலுள்ள முக்கிய நகரங்களி லும், பட்டினங்களிலும், கேந் திர ஸ்தானங்களினும், பிர தான வீதிகளிலுமாக 600 க்கும் அதிகமான இராணுவ முகாம்களை நிறுவி, தனது பாரிய இராணுவக் குடையை தமிழீழம்மீது விரித்து வைத்த போதும், விடுதலைப் புலி வீரர்களின் சளையாத தாக்கு தல்களால் இந்திய இராணு வம் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த முடியாது திண றியது. தமிழீழத்தின் வனப் பிரதேசங்களும், கிராமப் புறங் களும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ்இருந்தன. காட்டுப்புறகெரில்லாப் போர் யுக்திகளிலும், மறைமுக அதி

குள் நுழையமுடியாது இந்திய படைகள் பின்வாங்கின.

**இக் கட்டுரை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு வெளியீட்டு வாரி த்தால் வெளியிடப்பட்டது.**

## பாராளு-உறுப்பினர்களுக்கு தலா 25 லட்சம் ரூபா

(கொழும்பு)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ரூபா 25 லட்சம் வளங்கப்படவுள்ளது என நிதி திட்டமிடல் அமைச் சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் அரசாங்க அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

## கிழக்கில் நினைவு தூபிகள்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உயிர் இழந்த தியாகிகள் நினைவு தூபிகள் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் பொதுமக்களால் அமைக்கப் பட்டு வருகின்றன.

காரைதீவு சந்தி, கல்முனை அரசடி சந்தி ஆகிய இடங் களில் இரு தூபிகள் அமைக் கப்பட்டுள்ளது.

கல்முனை பொலிஸ் சந்தி, கல்லடி சந்தி ஆகிய இடங் களிலும் தூபிகள் அமைக்கப் பட்டு வருகின்றன. (37)

## இவர்களுக்கு இடமில்லை

ஆசிரியர்
ஈழநாதம்

மக்கள் செல்வாக்கில்லாத சட்டவிரோத மாகாண அர சுக்கு ஊன்றுகோலாக நின்று உயர்பதவிகளைப் பெற்று அப் பதவியில் இருக்கும் போது ஊழல்கள், அதிகார துஷ்பிர யோகங்கள் புரிந்த மாகாண சபையின் செயலாளர்கள், உயர் அதிகாரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களும் புகார்களும் ஏராளமாக உள் ளன. இவர்களில் சிலர் தலை மறைவானதுடன் வேறு சிலர் உலாவி வருகின்றனர். இவர்களில் சிலர் தங்கள் நிறங்களை மாற்றி மாகாண சபையில் தாம் இழந்த பதவிகளை மீண்டும் பெறுவதற்கு பல்வேறு முயற் சிகள் எடுத்து வருவதனை காணக்கூடியதாக இருக்கி றது.

தற்போதைய சூழ்நிலையில் இவர்கள் தப்பித்துக் கொள் கிறார்கள்.

ஆகவே பழைய மாகாண சபையின் உயர் அதிகாரிகளை மீண்டும் அப்பதவிக்கு நிய மிக்காது இருப்பதுடன் அவர் களின் ஊழல்களை விசாரிப் பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

எஸ் அப்துல் கபூர்
யாழ்ப்பாணம்

### மக்கள் மடல்

## முல்லைத்தீவில் கற்பகம் திறப்புவிழா

(கொழும்புத்துறை)

பனை அபிவிருத்திச்சபை இம்மாதம் 28-ஆம் திகதி முல் லைத்தீவில் 'கற்பகம்' விற் பனை நிலையமொன்றைத் திறந்து வைக்க உள்ளது. முல்லைத்தீவு உதவி அரச அதிபரும், பிரதேச சபை விசேட ஆணையாளருமான திரு. வே. சந்தாமி இத னைத் திறந்துவைப்பார். (24)

## பரீட்சைப் பெறுபேறு மீளாய்வு

(மட்டக்களப்பு)

அண்மையில் வெளியான க. பொ. த (உயர்) பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங் கள் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒரு பாடம் மீளாய்வுக் கட்டணம் ரூபா 50/- ஆகும்.

பாடத்திற்குத் தனித்தனி யாக விண்ணப்பிக்கவேண்டும்.

## ஐந்தாம் ஆண்டு சித்தியடைந்தவர்களுக்கு ஆறாம் ஆண்டுஅனுமதிபரீட்சைநடாத்தவேண்டும்

### கல்வியமைச்சின் செயலாளர் அறிவிப்பு

(பருத்தித்துறை)

பிரபல பாடசாலைகளில் ஆறாம் ஆண்டிற்கு மாணவர் களை அனுமதிப்பதற்கு நடாத்தப்படும் பிரவேசப் பரீட்சை கல்வி வட்டார ரீதி யாகவோ, அல்லது கொத் தணி ரீதியாகவோ மட்டுப் படுத்தப்படக் கூடாது. இப் பரீட்சை ஐந்தாம் ஆண்டில் சித்தியடைந்த சகல மாணவர் களும் விண்ணப்பிக்கக்கூடிய வகையில் நிபந்தனையற்று பகிரங்கப் பரீட்சையாக நடாத்தப்பட வேண்டுமென கல்வி அமைச்சின் செயலாளர் கேணல் வீ. எஸ். குடலிகம பணித்துள்ளார்.

இவ் உத்தரவை மீறும் கல்வியதிகாரிகள், பாட சாலை அதிபர்கள் மீது உடன் கடும் நடவடிக்கை எடுக்கப் படவேண்டும் எனவும் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச் சுச் செயலாளருக்கு அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இவ் உத்தரவின் பிரதிகள் பருத்தித்துறை ஹாட்லிக் கல் லூரி அதிபர், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரக்கல்லூரி அதிபர் ஆகியோ ருக்கும் அனுப்பிவைக்கப்பட் டுள்ளன.

இவ்விரு பிரபல கல்லூரி களிலும் 6 ஆம் ஆண்டு பிர வேசமுறைகளில் கல்வியமைச் சின் சுற்று நிருபம் மீறப்பட் டுள்ளதாக பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியினதும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி யினதும் மாணவர்களின் பெற் றோர்கள் கல்வி, கலாசார, தகவல்துறை அமைச்சருக்கு முறையீடு செய்திருந்தனர்.

ஆறாம் ஆண்டிற்கான அனு மதிபற்றிய கல்வி அமைச்சு சுற்றுநிருபம் மீறப்படக் கூடாது என இப்பெற்றோர் களின் நியாயமான முறையீட் டையடுத்து கல்வி, கலாசார தகவல்துறை அமைச்சுச் செய லாளர் எச்சரித்துள்ளார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி யடைந்த மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர் பரீட்சைப் பெறுபேறு களின் பிரகாரம் அனுமதி வழங்கல் முடிவுற முன்னர் நடாத்துவதற்கு திட்டமிடப் பட்டுள்ள யாதேனும் பரீட் சைகள் இருப்பின் அப்பரீட் சைகளை உடனடியாக நிறுத் திவைக்குமாறும் அமைச்சுச் செயலாளர் தடை உத்தரவு விதித்துள்ளார்.

யாழ். கல்வித்திணைக்களத் தின் உத்தரவின் பேரில் பருத் தித்துறை மெதடிஸ்த பெண் கள் கல்லூரிக்கு 6 ஆம் ஆண் டிற்கு மாணவிகளை அனும திப்பதற்கான பிரவேசப் பரீட்சை பருத்தித்துறை புலோலி கொத்தணிகளுக்கு மட்டும் நடாத்தப்பட்டுள்ளது. இது கல்வியமைச்சின் சுற்று நிருப நடைமுறைகளுக்கு முரணானது.

சுற்று நிருபத்தில் குறிப் பிடப்பட்டுள்ளன ஊட்டப் பாடசாலை (ஆரம்பபாட சாலை) என்பதன் விளக்கம் தவறாகப் புரிந்து கொள்ளப் பட்டு விளக்கமளிக்கப்பட்டுள் ளது தெரியவந்துள்ளது.

ஐந்தாம் ஆண்டிற்குப் பின் னர் பரீட்சை ஏதுமின்றித் தனது மாணவர்களை ஒரு சிரேஷ்ட பாடசாலைக்கு வழங்கி வந்துள்ள ஆரம்ப பாடசாலைகளே அனுமதிக் சப்பட்ட ஊட்டப்பாடசாலை யாகும். தனது மாணவர் களைப் பரீட்சை ஏதுமின்றித் தானாகவே ஒரு சிரேஷ்ட பாடசாலைக்கு அனுமதித்துக் கொள்ளாத எந்தவொரு பாடசாலையும் ஊட்டப்பாட சாலையாகக் கருதப்பட மாட் டாது என்றும் அமைச்சுச் செயலாளரின் பணிப்புரையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# ஈழநாதம்

## வறியோருக்கு றெட்பானா 56000 ரூபா உதவி

(கிளிநொச்சி)

றெட்பானா நிறுவனத்தின் முருகண்டிக்கிளை வறுமைக் கோட்டின் விளிம்பில் வசித்து வரும் இருபத்திநான்கு பெண்களுக்கு அன்றாடம் வருவாய் தரும் தொழில்களை மேற்கொள்ளுவதற்காக ஐம்பத்தி ஆறாயிரம் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

மேற்படி ஸ்தாபனத்தின் முருகண்டிப் பகுதி சமூக அபிவிருத்தி இணைப்பாளர் திரு. பொன். பத்மநாதனைச் சந்தித்து இக்கொடுப்பனவு சம்பந்தமாகக் கேட்டபோது அவர் மேலும் கூறியதாவது,

கூடுதலாக விதவைப் பெண்களுக்கே இவ்வாறான கொடுப்பனவுகளைக் கொடுத்து வருகிறோம். பணத்தைக் கொடுப்பதற்கு முன் செய்ய விரும்பும் தொழிலைப்பற்றி அறிந்து அத்தொழில் மூலம் தினசரி வருவாயைப் பெற முடியுமானால் அத்தொழில் சம்பந்தமாக ஒருவாரகாலப் பயிற்சி அளிக்கப்படும். அதன் பின்பு ஐந்துபேர் கொண்டதாக குழுக்கள் அமைக்கப்பட்டு அக்குழுக்களிடம் பணம் கொடுக்கப்படும் என்றார்.

கொடுக்கப்பட்ட பணம் முறையாகச் செலவிடப்படுகிறதா, அதன்மூலம் அன்றாட வாழ்க்கைக்கு ஊதியம் கிடைக்கிறதா என்பதை நாம் அவதானிப்போம். தொழில்மூலம் கிடைக்கும் லாபத்திலிருந்து அவர்கள் பெற்ற கடனை ஐம்பது வாரத்தில் கட்டி முடிக்க வேண்டும். (49)

### 4200 ரூபாய்க்கு....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதில் 1983 டிசம்பர் வரைக்கும் முப்பது சதவீத வட்டியும் 1984 ஜனவரி முதல் 1987 டிசம்பர் வரையும் இருபது சதவீத வட்டியும் அறவிடப்பட்டுள்ளது. 1987 டிசம்பருக்கு பின்னர் வட்டியே இல்லை என அந்த அதிகாரி சொன்னார்.

வரி என்று குறிப்பிடுவது விற்பனவு வரியைக் குறிக்கும். அதாவது வட்டியில் ஐந்து வீதம் அறவிடப்படுகிறது. அதில் இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவுக்கு குறைந்த வட்டியானால் அதனை வங்கியே அரசுக்கு செலுத்தும். இரண்டாயிரத்து ஐநூறுக்கு மேற்பட்டால் அதனை வாடிக்கையாளரே செலுத்த வேண்டும். அதன்படி இந்த நபருக்கு இருநூற்றி ஏழு ரூபா வரியாகவும் அறவிடப்பட்டுள்ளது.

### கல்முனைக்குடியில்.!.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாப். எம். எச். ராஜா முகம்மது, பொருளாளர்: ஜனாப். எஸ். செயின்தம்பி இவர்களுடன் பதினேழு பேர்கள் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

இவ்வங்குரார்ப்பண வைப

## சென்.பற்றிக்ஸ் பரிசளிப்புவிழா

(கொழும்புத்துறை)

யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு வைபவம் இன்று 28ஆம் திகதி புதன்கிழமை யாழ் ஆயர் அதி வண. பீ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் நடைபெற உள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலை மருத்துவ பீட பேராசிரியர் வைத்திய கலாநிதி டி. ராமதாஸ் இதில்பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

### பால் கூட்டுறவுச்,..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னைய காலங்களில் கிளிநொச்சியிலிருந்து லொறி மூலம் பால் இங்கு எடுத்து வரப்பட்டது. அத்துடன் பைக்கட்டில் அடைக்கப்பட்ட பாலும் அங்கிருந்து இங்கு தருவிக்கப்பட்டன.

இவ்வாறு பால் தருவிக்கப் படாவிட்டால் இந்த பால் சாலைகள் நட்டத்தில் இயங்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

### தமிழர்...

### இந்திய இராணுவம்...-.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை ராஜீவ் காந்தி அரசாங்கம் மாறிய பிறகு ஆட்சியைக் கைப்பற்றிய புதிய தலைமை இந்திய இராணுவத்தை மீள அழைப்பது தொடர்பாக நம்பிக்கையான கருத்தைக் கொண்டிருந்தது.

நான் ஆட்சிக்கு வந்ததும், இந்திய இராணுவம் இலங்கையில் நிலை கொண்டிப்பது எமக்கு இழுக்கென்றும், அதை வெளியேறும் படியும் கேட்டிருந்தேன்.

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸ கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:

ராஜீவ் அரசாங்கம் துருப்புகளில் சிறுபகுதியை மீள அழைத்தபின், மீதிப் படையை அழைப்பதற்கு வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு அதிகாரங்களை வழங்க வேண்டும் என்று சில நிபந்தனைகளை முன்வைத்து அந்த நிபந்தனைகளுக்கு நான் இசைந்து வரவில்லை. பிறகு டிசம்பர் 30 ஆம் திகதிக்குள் இந்தியப்படையை அழைக்கப் போவதாக உறுதி கூறியிருந்தார். அதற்கும் சில நிபந்தனைகளை போட்டார். அதையும் நான் ஏற்றுக் கொள்ளவில்லை. எமது காலம் தேர்தலின் போது ராஜீவ் காந்தியின் அரசாங்கத்தை மக்கள் நிராகரித்தனர். இந்தியர்களை எதிர்த்துப் போரிட்டு எம்மால் வெல்ல முடியாது. நம் ஆயு பலமில்லாத சின்ன நாடென்றாலும் இந்தியாவுக்கு நாம் பணிந்துவிடுவோம் எ பதல்ல. எமக்கென்று ஆளுமைப் பலமும், சுயகௌரவமும் இருக்கிறது. நாம் எந்தப் பெரிய சக்திக்கும் அடிபணியப் போவதில்லை.

எமது நிலையை மற்றவர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த இடம் கொடுக்கக் கூடாதென்றும், புதிய அரசாங்கம் இந்தியப் படையை காலக்கெடுவில் திருப்பி அழைத்துள்ளதென்றும், சனி காலை 10 மணிக்குப் பிறகு இலங்கை கௌரவத்தோடும். மரியாதையோடும் பேசக்கூடியதாகவுள்ளது என்று தெரிவித்

## அன்னை பூபதி நினைவாக விளையாட்டுப் போட்டி

(முத்துஐயன்கட்டு)

அன்னை கணபதிப்பிள்ளை பூபதியின் நினைவுதினத்தை முன்னிட்டு முத்துஐயன்கட்டு வலதுகரை அ.த.க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி 20-3-1990 பிற்பகல் 2 மணிக்குப் பாடசாலை அதிபர் திரு. செ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி விளையாட்டுப் போட்டியில் கலைமகள் இல்லம் முதலாம் இடத்தையும், மலைமகள் இல்லம் இரண்டாம் இடத்தையும், அலைமகள் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

இவ்விளையாட்டுப் போட்டிக்கு பிரதமவிருந்தினராக ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபரும் கொந்தணி அதிபருமாகிய திரு. தா. சிவசம்பு முல்லை மாவட்ட கலை கலாசாரப் பொறுப்பாளர் திரு. க. சங்கர் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினர்.

## சேருவிலவில் சமாதானக்குழு

(மூதூர்)

சேருவில உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான சமாதானக் குழுக்கூட்டம் நடைபெற்றது. இதற்கு சேருவில உதவி அரசாங்க அதிபர் தலைமை தாங்கினார். தமிழ் முஸ்லிம் குழுக்களுக்கிடையே ஐக்கியத்தை நிலை நிறுத்தவே இச் சமாதானக் குழுக்கூட்டம் நடைபெறுகிறது என தனது உரையில் அரச அதிபர் கூறினார்.

இக் கூட்டத்திற்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் சார்பில் வ. ராஜேஸ் மா. தவநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். சேருவில உதவி அரசாங்க அதிபர் பேசுகையில் ஐக்கியத்திற்கு விடுதலைப்புலிகளின் ஒத்துழைப்பு மிக முக்கியம் எனக் குறிப்பிட்டார். இதற்கு விடுதலைப் புலிகள் சார்பில் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

### கிளிநொச்சி....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாச்சிக்குடா, கிளாலி போன்ற பகுதிமக்கள் தத்தமது தேவைகளுக்கு யாழ்ப்பாணம், மன்னார் அலுவலகங்களுக்கே சென்றனர்.

இந்தப் புதிய அலுவலகத்தை அமைத்து இப்பகுதியில் மீன்பிடித்துறையை அபி

# அழகு என்ற பெயரில் அசிங்க போட்டி வேண்டாம்

## கலாசார சீரழிவுக்கு இடமளிக்கமுடியாது என்கிறது மகளிர் முன்னணி!

(யாழ்ப்பாணம்)

பெண்களை அழகு என்ற பெயரில் அசிங்கமாக்குகின்ற அழகுப் போட்டிகளையும். இப் போட்டிகளின் மூலம் எமது கலாசாரத்தை சீரழித்து எமது போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்கின்ற நடவடிக்கை எதனையும் நாம் அனுமதிக்க முடியாது என விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் நேற்று விடுத்த எமது கலாசாரத்தை மேம்படுத்துவோம் என்ற தலைப்பிலான அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

மேலும் அவ்வறிக்கையில்

எதிர்வரும் சித்திரை மாதம் 14ஆம் திகதி தமிழ்ப்புதுவருடம் பிறக்கிறது. எமது தாயகம் இன்று முழுமையான சுதந்திரம் பெற்ற பூமியாக திகழவில்லை என்றாலும் கடந்த சில வருடங்களாக எம் மக்கள் அனுபவித்து வந்த இன்னல்கள் இன்று குறைந்துவிட்ட நிலையில், வருகின்ற புத்தாண்டை ஆனந்தம் கலந்த ஆர்வமுடன் வரவேற்க மக்கள் தயாராகிக்கொண்டிருக்கின்றனர். இது இயல்பானதே நாட்டில் இப்பொழுதே புத்தாண்டுக்களை தோன்றிவிட்டது

ஒவ்வொரு பிரதேசத்தில் உள்ளவர்களும் தத்தமது வாழ்நிலமைகளுக்கும் கலாசாரப் பாரம்பரியத்திற்கும் ஏற்ப கலை கலாசார நிகழ்ச்சிகளை வரும் புத்தாண்டு தினத்தில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்து கொண்டு இருக்கிறார்கள்.

இதேவேளை புத்தாண்டு விழா நிகழ்ச்சிகளில் ஒன்றாக சித்திரை நங்கைப் போட்டி நடைபெற இருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது.

ஒவ்வொரு அரசாங்க அதிபர்களுக்கூடாகவும் சித்திரை நங்கை போட்டியை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இந் நிகழ்ச்சிமூலம் அழகில் சிறந்த யுவதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டு அவர் சித்திரை நங்கை எனப் பெயர் சூட்டப்படுவார்.

தெரிவு செய்யப்படும் நங்கைக்கு சூட்டப்படும் பெயரில் மாற்றம் ஒன்றைத்தவிர இந்த சித்திரை நங்கைப் போட்டிக்கும், ஆபாச அங்க அசைவுகளுடனும், அரைகுறை உடையுடனும் வெளிநாடுகளில் நடைபெறும் அழகுராணிப் போட்டிக்கும் எந்த வித வித்தியாசமும் இல்லை.

நாகரிக வளர்ச்சி என்பது வெளிநாட்டு நடைமுறைகளை அப்படியே பின்பற்றுவதல்ல எமது சமுதாயத்தின் கலாசார மேம்பாட்டுக்குரிய நடை முறைகளையே நாம் பின்பற்றவேண்டும்.

தம் தாங்கிய போராளிகளாயுள்ளனர். பல்லாயிரக்கணக்கான பெண்கள் போராட்டத்திற்கென தம்மை அர்ப்பணிக்க மனப்பூர்வமாய் முன்வந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் பெண்களின் விடுதலையை பின் தள்ளும் வகையில் அமைந்ததும் எமது தனித்துவமான கலாசாரத்தை சின்னாபின்னப்படுத்துவதனூடாக எமது விடுதலைப் போராட்டத்தினை கொச்சைப்படுத்தும் வகையில் அமைந்ததுமான இந்த சித்திரை நங்கைப் போட்டிக்கு என்ன அவசியம் வந்தது? ஒரு இனத்தின் தனித்துவத்தைக் காட்டுவது அதன் கலாசாரமே.

தமிழினத்தின் தேசியத் தன்மையைக் குன்றச் செய்யக்கூடிய இதுபோன்ற கலாசாரச் சீரழிவு நிகழ்ச்சிகள் ஒருபோதும் எம் மண்ணில் இடம் பெறாதவாறு நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படியான கலாசாரம் சீரழிவு நடவடிக்கைகளில் எம் மக்களில் ஒருசிலர் ஈடுபடுவதும், இப்படியான சிந்தனைகளை மக்கள் மனதில் தூண்டிவிடுவதும், ஊக்குவிப்பதும் எத்தனை கேவலமானது?

காலத்தின் தேவைக்கேற்ப எமது பாரம்பரியத்தை, எமது கலாசாரத்தை வெளிப்படுத்தக்கூடிய, வளர்க்கக்கூடிய பெண்களின் தேசத்தின் விதலைக்கான எழுச்சியை ஊட்டக்கூடிய எத்தனையோ நிகழ்ச்சிகளை நாம் நடத்தலாம்.

எம் மக்களின் தேசிய உணர்வை மழுங்கடிக்கக்கூடிய இதுபோன்ற கீழ்த்தரமான நிகழ்ச்சிகள் எம் மண்ணில் இடம் பெறாதவாறு எம் மக்கள் அனைவரும் ஒருமித்த சிந்தனையுடனும், தெளிவான நோக்குடனும் செயற்படவேண்டும் தமிழீழ பிரதேசத்தின் எந்த வொரு

### படை விலகல்...

(1 ஆம் பக்க தொடர்சி)

இலங்கை இந்திய உறவு நிலையும் மேலும் விருத்தியடையும் என்றும் அமெரிக்கா நம்பிக்கை தெரிவிப்பதாக அவர் கூறினார்.

### பத்திரிகையாளர்...

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

ருந்த காலங்களில் இந்திய அரசு எமக்கு இங்கு வருவதற்கு தடை விதித்திருந்தது. தற்பொழுது இந்திய அமைதிப்படையின் வெளியேற்றத்தினைத் தொடர்ந்து இங்கு வரமுடிகிறது என்றார்கள்.

கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளுள் ஒன்றான ஐலன்ட் பத்திரிகை செய்தியாளரிடம் யாழ்ப்பாண விஜயம் பற்றி வினவியபோது தாங்கள் இப்பொழுதுதான் வடபகுதிக்கு எதுவித அச்சமுமின்றி சுதந்திரமாக, வரக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்கள்.

### வட கிழக்கு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்காலத்தில் மோதல்களை உருவாக்க ஜனாதிபதி பிரேமதாஸா எதனையும் செய்யமாட்டார் என தாம் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்தியப்படை வெளியே

அதாவது வட்டியில் ஐந்து வீதம் அறவிடப்படுகிறது. அதில் இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவுக்கு குறைந்த வட்டியானால் அதனை வங்கியே அரசுக்கு செலுத்தும். இரண்டாயிரத்து ஐநூறுக்கு மேற்பட்டால் அதனை வாடிக்கையாளரே செலுத்த வேண்டும். அதன்படி இந்த நபருக்கு இருநூற்றி ஏழு ரூபா வரியாகவும் அறவிடப்பட்டுள்ளது.

## கல்முனைக்குடியில்..!.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாப். எம். எச். ராஜா முகம்மது, பொருளாளர்: ஜனாப். எஸ். செயின்தம்பி இவர்களுடன் பதினேழு பேர்கள் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

இவ்வங்குரார்ப்பண வைபவத்தில் புலிகள் மக்கள் முன்னணி அம்பாறை மாவட்ட பொறுப்பாளர் திரு. கஸ்ரோ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். (48)

## ஆரம்பபாடசாலை,..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஏற்றுக்கொள்ளப்பட்டவற்றை கல்வியிலும் தொடர்புடைய இருபத்திரண்டு சிபார்சுகள் புதிய கல்விக் கொள்கையில் சேர்த்துக்கொள்ளப் படவுள்ளன.

இதன்படி கல்விமுறை அமைப்பு, குறிக்கோள், செயல்முறை மற்றும் பயிற்சி நடைமுறைகளில் பெரும் மாற்றம் ஏற்டுடுத்தப்படவுள்ளது.

இந்த முறையினால் கல்வியிலும், முறைசாரா கல்வியிலும் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்படவுள்ளன.

பாடசாலைக்கு செல்லாத பிள்ளைகள் பாடசாலைக்கல்வியை பூர்த்தி செய்யாது வெளியேறியவர்கள், இளைஞர்கள், வயதுவந்தோர் ஆகியோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் முறைசாரா கல்வி அமையும்.

முறைசாராக் கல்வி பயிலும் ஒருவர் விரும்பினால் முறையான கல்வியை பயில்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் புதிய திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

ஆரம்ப பாடசாலை பாடவிதானத்தில் உடனடியாக மாற்றங்கள் இடம்பெறும், அவை பின்னர் படிப்படியாக ஏனைய தரங்களுக்கும் விஸ்தரிக்கப்படும்.

ஆரம்ப வகுப்புகளில் தொழில் நுட்பவியல் என்ற புதிய பாடமும் அறிமுகப்படுத்தப் படவுள்ளது. இவ்வாறு திருமதி காரியவாசம் கூறினார்.

ரியர் வைத்திய கலாநிதி டி. ராமதாஸ் [illegible] பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

## பால் கூட்டுறவுச்,..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னைய காலங்களில் கிளிநொச்சியிலிருந்து லொறி மூலம் பால் இங்கு எடுத்து வரப்பட்டது. அத்துடன் பைக்கட்டில் அடைக்கப்பட்ட பாலும் அங்கிருந்து இங்கு தருவிக்கப்பட்டன.

இவ்வாறு பால் தருவிக்கப் படாவிட்டால் இந்த பால் சாலைகள் நட்டத்தில் இயங்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

## தமிழர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி;

பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் நிர்வாகச் செயலாளர் திரு. த. அருணகிரி ராஜா ஆகியோர் அப்பகுதிகளுக்குச் சென்று புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

கிழக்குமாகாணத்தில் கிளைகளின் புனரமைப்பு வேலைகளும் விரைவில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் யூன் மாதத்தில் வருடாந்த பொதுக்கூட்டம், இடம்பெறவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (36

## பழக்கதோஷம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சில அலுவலகங்களில் குறிப்பிட்ட ஊழியரின் மேசையில் அவரது 'பாக்' காணப்படும் அவரைப்பற்றி விசாரித்தால் வெளியே போய்விட்டார், சாப்பிடப்போனார் என்று அருகில் உள்ளவர் கூறுவார்கள். இதனால் இவர்களிடம் அலுவல்களைப்பூர்த்தி செய்ய வருபவர்கள் பல மணிநேரம் காத்திருந்து ஏமாற்றத்துடனே செல்கின்றனர் எனவும் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

## ஆசிரியர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட்டுத் திரும்பவும் கொழும்புக்குச்செல்வதற்குமுன் கோயிலுக்கு வழிபடச் செல்லும் போதே இச் சம்பவம் நடைபெற்றதாக தெரியவருகின்றது.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை இவரது சடலம் மருதங்கேணி வடலியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் காணப்பட்டது. (36)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது

வெல்ல முடியாது. நாம் ஆயு பலமில்லாத சின்ன நாடென்றாலும் இந்தியாவுக்கு நாம் பணிந்துவிடுவோம் என்பதல்ல. எமக்கென்று ஆளுமைப் பலமும், சுயகௌரவமும் இருக்கிறது. நாம் எந்தப் பெரிய சக்திக்கும் அடிபணியப் போவதில்லை.

எமது நிலையை மற்றவர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த இடம் கொடுக்கக் கூடாதென்றும், புதிய அரசாங்கம் இந்தியப் படையை காலக்கெடுவில் திருப்பி அழைத்துள்ளதென்றும், சனி காலை 10 மணிக்குப் பிறகு இலங்கை கௌரவத்தோடும். மரியாதையோடும் பேசக்கூடியதாகவுள்ளது என்று தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இஸ்ரேலிய நலன்காப்பு பிரிவு இலங்கையில் இருந்தது இலங்கையின் இறைமைக்கு இழுக்கென்றும், அதனால்த்தான் அது மூடப்பட்டது. என்றும், இஸ்ரேலியர் பலஸ்தீனியரைக் கொலை செய்வதை நிறுத்தி, பலவந்தமாகக் கைப்பற்றிய பலஸ்தீனிய திட்டுக்களைக் கையளித்தால், இலங்கை அரசு இஸ்ரேலுடன் ராஜரீக உறவு வைத்துக் கொள்வது பற்றி ஆலோசிக்கப்படலாம் என்றார்.

## நேர்மையாகவும்..-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சகல எம். பிக்களும் பாராளுமன்றம் நடைபெறும் எட்டு நாட்களைத் தவிர ஏனைய நாட்களில் தொகுதிகளுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை அவதானித்துச் செயற்பட வேண்டும் எனத்தாம் விரும்புவதாகவும் அவர் சொன்னார்.

அமைச்சர்களும், ராஜாங்க அமைச்சர்களும் தமது பாதுகாப்பைக் குறைக்கும் காலம் வந்து விட்டது. ஒருவருக்கு பத்துக்கு மேற்பட்ட வாகனங்கள் வரை பாதுகாப்புக்கு பயன்படுத்தப் படுகிறது. இதனால் செலவு அதிகரிக்கபடுகிறது எனவும்அவர் சொன்னார்.

ஒரு அமைச்சர்ஒரு வாகனத்தையும், மேலதிகமாக மற்றுமொரு வாகனத்தையும் வைத்திருக்குமாறும், பாதுகாப்புக்காக ஒன்றையும் வைத்துக் கொண்டு எஞ்சியவற்றைத் திணைக்களங்களுக்கு ஒப்படைக்கலாம் எனவும் அவர் ஆலோசனை கூறினார்.

மக்களுக்காக ஆபத்துக்களை எதிர்நோக்க விரும்பாதவர்கள் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கக் கூடாது. கடந்த கால அனுபவங்களைக் கொண்டு அமைச்சர்களின் கடமைகளில் மாற்றங்கள் செய்யப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

[illegible] முன்னணியின் சார்பில் வ. ராஜேஸ்மா. தவநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். சேருவில உதவி அரசாங்க அதிபர் பேசுகையில் ஐக்கியத்திற்கு விடுதலைப்புலிகளின் ஒத்துழைப்பு மிக முக்கியம் எனக் குறிப்பிட்டார். இதற்கு விடுதலைப் புலிகள் சார்பில் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

## கிளிநொச்சி....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாச்சிக்குடா, கிளாலி போன்ற பகுதிமக்கள் தத்தமது தேவைகளுக்கு யாழ்ப்பாணம், மன்னார் அலுவலகங்களுக்கே சென்றனர்.

இந்தப் புதிய அலுவலகத்தை அமைத்து இப்பகுதியில் மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்ய மீன்பிடி அமைச்சு துரித நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்காக புதிய சட்டிடமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக உயர் அதிகாரி ஒருவர் ஈழநாதத்துக்கு தெரிவித்தார். இதன் புதிய அதிகாரியாக திரு. ஏ. ஈ. ஆர். ஜெயரட்ணம் மீன்பிடி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## 3 மாதத்துக்குள்...-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னார். இப்பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் சார்பில் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. றூபன் கலந்துகொண்டார். அகதிகள் குழுவில் சுமார் ஐம்பது பேர் கலந்து கொண்டனர். அரசின் தரப்பில் திருமலை இராணுவ தளபதி லால விஜேரியா மற்றும் கடற்படை, விமானப் படைத்தளபதிகளும்பொலிஸ் அதிபரும் கலந்துகொண்டனர் இப்பேச்சுவார்த்தைகளில் தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்கப்படாததால் தொடர்ந்து இப்பிரச்னையையடுத்த வாரம் கொழும்பில் உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளில் ஆராய்வதென ஒப்புக் கொள்ளப்பட்டது. பேச்சுவார்த்தைகள் மிகச்சுமுகமான சூழ்நிலையில் நடை பெற்றது.

இதே சமயம் வடக்குகிழக்கு மாகாண சபைக்கு நடைபெற இருக்கும் தேர்தலையடுத்து மூன்று மாதங்களுக்குள் அகதிகள் பிரச்சினைக்கு நல்ல தீர்வு காணப்படலாம் என்றும் இப்பேச்சு வார்த்தைகளின் பின் தெரிவிக்கப்பட்டது.

திணைத் தொடர்ந்து இங்கு வரமுடிகிறது என்றார்கள்.

கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளுள் ஒன்றான ஐலன்ட் பத்திரிகை செய்தியாளரிடம் யாழ்ப்பாண விஜயம் பற்றி வினவியபோது தாங்கள் இப்பொழுதுதான் வடபகுதிக்கு எதுவித அச்சமுமின்றி சுதந்திரமாக, வரக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்கள்.

## வட கிழக்கு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்காலத்தில் மோதல்களை உருவாக்க ஜனாதிபதி பிரேமதாஸா எதனையும் செய்யமாட்டார் என தாம் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்தியப்படை வெளியேறிய பின்பு அமைச்சர் வெளிநாட்டுச் செய்தியாளரிடம் பேசினார்

பொலிஸ், இராணுவத்தில் எண்ணாயிரம் முதல் ஒன்பதாயிரம் பேர் வரை சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனக் கூறிய அவர் ஒவ்வொரு மாவட்டத்திலும் படைப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப் படும்.

அதில் ஆயிரம் பேர் இருப்பார்கள் அதன்படி இருபத்தைந்து மாவட்டங்களிலும் இருபத்தையாயிரம் படையினர் இருப்பார்கள் என்றும் சொன்னார்.

கடற்படை விமானப்படை பற்றிக் குறிப்பிட்ட அமைச்சர் இவை விசேட சேவை என்றும் இதற்கு அதிகமானோர் தேவையில்லை என்றும் கூறினார்.

இராணுவத்தில் கடந்த இரண்டு வருடகால பயிற்சியும், கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்களும் போதுமானவையாகும். மேலும் நவீன ஆயுதங்கள் தேவையில்லை ஏனெனில் இனிமேல் எந்தவொரு நசேகார நடவடிக்கைகளும் நாட்டில் இடம் பெறப்போவகில்லை,

மீண்டும் இடம்பெறுவதை இலங்கை விரும்பவில்லை. இனிமேலும் எதனையும் நாம் விரயமாக்கப்போவதில்லை. என்றும் அமைச்சர் ரஞ்சன் சொன்னார்.

பாதுகாப்பு தொடர்பான செலவின மதிப்பீடுகளை தாமே பேற்கொள்ளவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பு சம்பந்தமான அபிப்பிராய வாக்களிப்பு பற்றி குறிப்பிட்ட அமைச்சர் ரஞ்சன் இருமாகாணங்களிலும் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களும், சிங்களவரும் வசிப்பதால் பொதுவான அபிப்பிராயம் ஒன்றைப்பெற கலந்து ஆலோசிக்கப்படும் என்றார்.

நங்கை போட்டியை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இந் நிகழ்ச்சிமூலம் அழகில் சிறந்த யுவதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டு அவர் சித்திரை நங்கை எனப் பெயர் சூட்டப்படுவார்.

தெரிவு செய்யப்படும் நங்கைக்கு சூட்டப்படும் பெயரில் மாற்றம் ஒன்றைத்தவிர இந்த சித்திரை நங்கைப் போட்டிக்கும், ஆபாச அங்க அசைவுகளுடனும், அரைகுறை உடையுடனும் வெளிநாடுகளில் நடைபெறும் அழகுராணிப் போட்டிக்கும் எந்த வித வித்தியாசமும் இல்லை.

நாகரிக வளர்ச்சி என்பது வெளிநாட்டு நடைமுறைகளை அப்படியே பின்பற்றுவதல்ல எமது சமுதாயத்தின் கலாசார மேம்பாட்டுக்குரிய நடை முறைகளையே நாம் பின்பற்றவேண்டும்.

எமது தேசத்தின் விடுதலைக்காக எமது சமூக பொருளாதார அரசியல் தனித்துவத்தைப் பேணுவதற்காக நாம் இன்று எத்தனையோ உயிர்களைத் தியாகம் செய்து இரத்தம் சிந்திப் போராடிக் கொண்டிருக்கிறோம். உன்னதமான இந்தப் போராட்டத்தில் தமது பங்கினை உணர்ந்து இன்று ஆயிரக் கணக்கான பெண்கள் ஆயு

தமும் எத்தனை கேவலமானது?

காலத்தின் தேவைக்கேற்ப எமது பாரம்பரியத்தை, எமது கலாசாரத்தை வெளிப்படுத்தக்கூடிய, வளர்க்கக்கூடிய பெண்களின் தேசத்தின் விதலைக்கான எழுச்சியை ஊட்டக்கூடிய எத்தனையோ நிகழ்ச்சிகளை நாம் நடத்தலாம்.

எம் மக்களின் தேசிய உணர்வை மழுங்கடிக்கக்கூடிய இதுபோன்ற கீழ்த்தரமான நிகழ்ச்சிகள் எம் மண்ணில் இடம் பெறாதவாறு எம் மக்கள் அனைவரும் ஒருமித்த சிந்தனையுடனும், தெளிவான நோக்குடனும் செயற்படவேண்டும் தமிழீழ பிரதேசத்தின் எந்தவொரு மூலையிலாவது இதுபோன்ற கலாசாரச் சீரழிவுகள் இடம் பெற அனுமதிக்க முடியாது.

இதுபோன்ற கலாசார சீரழிவு நடவடிக்கைகளை ஒழிப்பதன்மூலம் எமது கலாசார மேம்பாட்டுக்காக உழைப்போம் என உறுதி பூணுவோம்.

## தபால் புகையிரதம் சிறிய நிலையங்களில் தரிக்கிறது

நேற்று முன்தினம் முதல் இரவு கொழும்பு யாழ்ப்பா ரயில் ஏழு சிறிய புகையிரத நிலையங்களில் தரித்துச் செல்கின்றது.

ஆனையிறவு, எழுதுமட்டுவாள், மிருசுவில், சங்கத்தானை, இணுவில் தெல்லிப்பனை என்பனவற்றிலேயே நிறுத்தப்படுகிறது.

ஏனைய சிறிய நிலையங்கள் அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளால் சேதமாக்கப்பட்டதால் இங்கு கடமைகளைச் செய்ய முடியவில்லை என ரயில்வே பகுதி அதிகாரி ஒருவர் கூறினார்.

## மரண அறிவித்தல்

### செல்லப்பா முத்தையா காலமானார்.

இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், திருமதி நா. பாஸ்கரன், திருவாளர்கள் திருநாவுக்கரசு, பரமசிவம், பாலகுமார், சிவந்தன், செல்விகள் சற்குணேஸ்வரி, ஜெகதீஸ்வரி, விக்னேஸ்வரி ஆகியோரின் தந்தையாரும், திரு பாஸ்கரன், திருமதிகள் ப. பிறேமா, பா. சொரூபவதி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 28. 03. 1990 புதன் காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''அயோத்தி''
சாவற்காடு ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

தகவல்:
மனைவி

R 48